1305.

1803. Vol. II—No. 9.

OFFICE OF THE ... 25 JUN 1926 MADRAS

# லக்ஷ்மி

சொந்தக்காரர்கள் :

கே. எஸ். முத்தையா & கோ.; சென்னை.

குஞ்சம் கட்டின

# பட்டு லேஞ்சிகள்

நைஸான் பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தன கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 1-க்கு ரூ. 12, 14, 16, 18.

ஷி ஜரிகை கரைகள் போட்டது ரூ. 16 முதல் 20 வரை.

---

## இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளைப் பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர் :—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 15, 18, 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களி லிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

---

## வலைப் பனியன்

போத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

**கே. எஸ். முத்தையா & கோ.,**

சில்க் ஹவுஸ்,

188, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

**சென்னை.**



## அமிர்தாபுரம் கோயில்.

மைசூர் சமஸ்தானத்தில் அமிர்தா புரத்தில் பல கோயில்கள் இருக்கின்றன. அவை சிற்ப வேலைக்குப் பேர் போனவை. அவை பன்னிரண்டாம் நூற்றாண்டில் கட்டப் பட்டவை. இந்தக் கோயில்கள் ஒன்றில் சிவராத்திரி யன்று சூரியன் பூஜிப்பது போல சூரிய கிரணம் மூலலிங்கத்தில் விழுந்து வந்தது. ஆனால் கோயில் சீர்கேடாய் விட்டதால், இப்பொழுது அந்த மகிமை குன்றிப் போய் விட்டது. இந்தக் கோயிலில் பாகவதம் தசமஸ்கந்தக் கதைகள் வரையப் பட்டுள்ளன. அர்ச்சுனன் பாசுபதம் பெற்றதும், ராமாயணக் கதைகளும் பிம்பரூபமாக விளக்கப் பட்டிருக்கின்றன.

ஓம்

# லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் உ. | குரோதனஃ சித்திரைமீ 1925 எப்ரல். | இதழ் கூ.

## அட்டவணை.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | லக்ஷ்மி துதி ... ... ... | 431 |
| 2. | ஊழின்வழி உயிர் ... ... | 432 |
| 3. | தமிழ் மொழி பேணல் ... ... | 433 |
| 4. | பெண்டிர் உரிமை நலம் ... ... | 445 |
| 5. | பால் உணவு ... ... ... | 450 |
| 6. | தமிழகத் தாருக்கு ... ... | 452 |
| 7. | உண்மை தவருத உத்தமன் ... | 457 |
| 8. | கைத்திறன் ... ... ... | 458 |
| 9. | சித்திரப் பத்தி ... ... | 460 |
| 10. | யசோதரன் ... ... ... | 463 |
| 11. | பாரத மாதா ... ... ... | 471 |
| 12. | பத்திராதிபர் குறிப்பு ... ... | 476 |
| 13. | உலகப் போக்கு ... ... | 479 |

சித்திரப் படம்.

1. அமிர்தாபுரம் கோயில்.
2. லார்டு ராலின்ஸன் அவர்கள்.
3. உஸ்மான் சாஹேப் அவர்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
210349
சென்னை 600 008

# லக்ஷ்மி

சந்தா விவரம்.

| | |
|---|---|
| உள் நாட்டுக்கு வருடம் 1க்கு இந்தியா, பர்மா, சிலோன் ... ... | ரூ. 2 0 |
| வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு ... ... ... | ரூ. 2 8 |

தனிப்பிரதி அணா 4

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாதம் முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக! பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10௳க்குள் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப்படமாட்டா.

மானேஜர்.

உங்கள் புத்தகசாலை பூர்த்தியாகாது!

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட்டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன் விலை ரூ. 3. தபாற்செலவு வேறு. சொற்ப காபிகளே கைவச முள்ளது. முந்துங்கள்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

ஓம்

## லக்ஷ்மி துதி

புந்திக் கலக்க மலிந்துன்னை
  நாடிப் புலம்பு கின்றேன்
சிந்திக்க வல்ல னல்லேன்
  என்னை யின்னமுஞ் சி ரழியேல்
நிந்திக்கத் தக்க அரும் புக
  ழார்வ நிறை வருள்வாய்
வந்திக்க வல்ல குறுமா
  முனிபின் வருந் திருவே!

# ஊழின்வழி உயிர்.

யாதும் ஊரே ; யாவருங் கேளிர் !
தீதும் நன்றும் பிறர்தர வாரா ;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன ;
சாதலும் புதுவ தன்றே ; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன் றுமிலமே ; முனிவின்
இன்னா தென்றலும் இலமே ; மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர் யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉ மென்ப திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின், மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே ;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

இதன்பொருள் :—எமக்கு எல்லாம் ஊர் ; எல்லாரும் சுற்றத்தார் ; கேடும் ஆக்கமும் தாமே வரி னல்லது பிறர் தர வாரா; நோதலும் அது தீர்தலும் அவற்றை யொப்பத் தாமே வருவன ; சாதலும் புதிதன்று, கருவிற் றோன்றிய நாளே தொடங்கியுள்ளது ; வாழ்தலை இனிதென்று உவந்தது மிலம் ; ஒரு வெறுப்பு வந்த விடத்து இன்னா தென் றிருத்தலு மிலம்; மின்னுடனே மழை குளிர்ந்த துளியைப் பெய்தலான் அமையாது கல்லையலைத்து ஒலிக்கும் வளவிய பேர்யாற்று நீரின் வழியே போம் மிதவை போல அரியவுயிர் ஊழின் வழியே படுமென்பது நன்மைக் கூறுபாடறிவோர் கூறிய நூலாலே தெளிந்தே மாகலான், நன்மையான் மிக்கவரை மதித்தலு மிலேம் ; சிறியோரைப் பழித்தல் அம் மதித்தலினும் இலேம்.

கணியன் பூங்குன்றன்.

புறநானூறு.

# தமிழ் மொழி பேணல்

ஸ்ரீமான் ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A., L.T.,

அவர்கள் எழுதியது.

ஆண்மையும் செல்வாக்கும் பெற்றுள்ள எந்த நாட்டை நோக்கினும் அங்கு அந்நாட்டு மொழி நலம்பெற்றோங்கி வருவதைக் காணலாம். பிறப்பட்டொழியும் பீடிலார் நாட்டில் அவர் தாய்மொழி தலைபெடுக்கா திருப்பது கண்கூடே. இவ் வுண்மைகளைப் பார்க்குமிடத்து ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்நாட்டு மொழியின் முன்னேற்றமும் இன்றியுமையாத தென்பதும், முன்னதற்குப் பின்னது ஓரடையாளமும் அளவு கோலுமாம் என்பதும் புலப்படும். இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் போன்ற தேயங்கள் ஏற்ற எடுத்துக் காட்டுக்களாம்.

இவ்வாறு ஆராயுங்கால், பொதுவகையில் இந்தியா முழுதும், சிறப்பு வகையில் தமிழ் நாடும் இந்நாளில் மேன்மை குன்றிய நாடெனத் தோன்றும். இங்குத் தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்குள்ள நிலைமையைமட்டுஞ் சிறிதாராய்வோம். பல அறிஞர்கள் இது பற்றிப் பேசியும் எழுதியும் உள்ளார்கள். ஆனால் அவர் உழைப்பு மிகையென்று சொல்லக்கூடிய நற்காலம் இன்னும் வரவில்லை. ஆதலால் இப்போதுஞ் சில உண்மைகளை நினைப்பூட்டி வற்புறுத்துதல் தமிழ்ப் பற்றுடையார் கடமையாய் முன்னிற்கின்றது.

தமிழ் நாட்டி னெல்லை வெவ்வேறு காலங்களில் வெவ்வே றளவினதாக மாறி வந்திருக்கின்றது. வெளி நாடுகளிற் குடியேறியுள்ள தமிழரைக் கணக்கிற் சேர்க்காது பார்க்கும்போது, பொதுவில் தமிழகத்தெல்லை நாளுக்கு நாள் சுருங்கி வந்துள்ளது என்று கூறலாம். 1921-ம் ஆண்டு எடுக்கப்பட்ட இந்திய மக்கட் டொகைக்

கணக்கின்படி இம்மாகாணத்தில் வசிப்போர் தொகை 42,794,155. இதில் தமிழ் பேசுவோர் தொகை 17,556,574. மாகாண வாசிகளில் 1000 பேருக்கு 410 பேர் தமிழ் பேசுவோர்; 377 பேர் தெலுங்கு பேசுவோர்; 75 பேர் மலையாளம் வழங்குவோர். பிற மொழியாளர் இவரினும் குறைந்த தொகையினர். இனி இம்மொழிகள் மிக்குப் பயிலும் இடங்களைக் கண்ணுறும் போது, "வடவேங்கடந் தென் குமரி யாயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" இந் நாளில் எவ்வளவு சுருங்கி விட்ட தென்பது புலனாகும். இம் மாகாணத்தில் ஒன்பது ஜில்லாக்களில் மட்டும் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு மக்கள் ஒரு மொழியையே பேசுகின்றனர். அவற்றில் ஐந்து தெலுங்குக் குரியன. ஒன்று மலையாளத்துக் குரியது. எஞ்சிய மூன்றே தமிழ்மிக்குப் பயிலு மிடம். அவை தஞ்சாவூர், திருநெல்வேலி, புதுக் கோட்டை சமஸ்தானம் என்பனவாம். பண்டு பல்லூழியில் தண்டமிழ ரசியின் குமரி நாட்டைக் கொடுங்கடல் கொண்டது. இடைக்காலத்தில் செந்தமிழ்ச் செல்வியின் சேர நாட்டை அவள் உதரத்துதித் தெழுந்த மலையாள மங்கை கைப்பற்றிவிட்டாள். இக்காலத்தோ தமிழணங்கின் தலை மகளாம் தெலுங்க நங்கை தன்னைப் தனக்குத் தந்த எல்லையைத் தாண்டிப் போந்து பல விடங்களைத் தன்ன தாக்கி வருகின்றாள். இன்னுஞ் சுருங்கிய வளவில் கன்னடக் காரிகையும் ஆங்கிலம் ஹிந்துஸ்தானி முதலிய ஆடவரும் தமிழின் ஆட்சியைத் தமிழ்நாட்டில் குறைத்து வருகின்றனர். தமிழ்த்தாய் யாது செய்வாள்? தான் பெற்ற பல்லிலக்க மைந்தர் முக நோக்குகின்றாள். இவர்களோ அவள் பரிவு காண்கின்றிலர். காணுஞ் சிலர் தாம் என் செய்ய வல்லரா யுள்ளார்?

தமிழ் வழங் கெல்லை குறுகிய தொரு புறமிருக்க, அது நன்கு வழங்கும் பகுதியிலும் தமிழர் தமிழைச் செவ்வனே போற்றுகின்றாரல்லர். "சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ......அலைந்தலைந்து வீணே யழிகின்றா ரந்தோ!" இவர்கள் தொகை இலக்கக் கணக்கில் இருந்தாவதென்ன? இத்தனை பேரும் இத்தனை வெறுஞ் சுன்னங்களே போன்றுளர். அன்பும் வீரமும் ஆருயிராய்க் கொண்ட அருங்

தமிழ்த் தாயானவள் இந்நாளில் வன்பு சேர் கோழை மக்களை வயிறுளையப் பெற்ற தென்ன கொடுமையோ! இவர்களிற் பலரை முன்செய்த தீவினை வறுமைப் பிணியாய் வந்து வாட்டுகின்றது. இன்பமின்ன தென்று அறியா இவ்வேழைகள் தாய்மொழிக் குறு பணிகள் செய்யும் ஆற்றலற்றவர். நடுத்தரமும் உயர்தரமுமான செல்வநிலை வாய்ந்த தமிழர் பலர் "அவிழ்ச்சுவையே அறிந்து அரனடி பரவுந் தமிழ்ச்சுவை அறியாராய்த் தரை மிசைத் திரிகின்றனர். தமிழ்த் தாய்க் குகந்த மக்களாய் உள்ளார் மிகச் சிலரே.

இதனுல் தமிழன்னை தனக் கணி செய்துவந்த நூல்களில் பலவற்றை அனலுக்கும் புனலுக்கும் அறியார்க்கும் வஞ்சகர்க்கும் பறிகொடுத்து விழிக்கின்ருள். இப்படிக் கழிந்தனவ போக எஞ்சியிருப்பவைகளையேனும் தன்மக்கள் அருமை யறிந்து பாராட்டாது கெட விடுவராயின் என்ன செய்வாள்? பாவம்! தந்தாய்மொழியையே அசட்டை செய்ப வரும் இழித்துரைக்குநருமாகிய தமிழர் (தமிழ் பேசுவோர்) சிலர் பல ருளர். இதனுல் வேறெந்த நாட்டிலும் காண முடியாத ஒரு விந்தையு மிங்கு காணக்கிடக்கின்றது: தமிழ் நன்கு பயிலாமையால் தமிழைப் பிழையறப்பேசவும் எழுதவும் தெரியாத தமிழன், இளம் பண்டிதன், பண்டிதன், மா பண்டிதன் என்று பொருள்படும் பட்டங்களைத் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகத்திலிருந்து பெற்று வீறுபெறுதல் இவ்வொரு நாட்டில் சாத்தியமா யிருக்கின்றது. தமிழை வெறுக்குந் தமிழர் பிறக்கும் போதும் இறக்கும் போதும் விரும்புவது அந்நிய பாடையே போலும்! உயர்தரக் கல்வி கற்குந் தமிழர் தமிழையுங் கட்டாயமாய்க் கற்றபோது தமிழுக்குப் பல சிறப்புகள் தோன்றத் தலைப்பட்டன. அக் கட்டுப்பாட்டை அழித்த நாள் தொடங்கிப் பலதீமைகளே வளருவ வாயின.

இம்மாறுதற்குக் காரணமா யிருக்கும் ஒரு கோட்பாட்டை மட்டும் ஈண்டுச் சிறிது ஆராயலாம்: தமிழ் நாட்டில் ஆங்கிலங் கற்போரும் கல்விமுறையைத் தீர்மானிப்போரும் தமிழை ஒரு 'வெர்னகுலர்' (Vernacular) மொழியென்று கூறுகின்ருர்கள். Vernacular என்னுஞ் சொல், 'வீட்டிற்பிறந்த அடிமை' என்னும் பொருள்தரும்

Verna என்னும் லத்தீனச் சொல்லி னடியாகப் பிறந்த தென்ப. இத்தாதுவி னடியாகவே பிறந்த Vernaculous என்னுஞ் சொல் 'அசங்கதமான', 'முரட்டுத்தனமான' என்னும் பொருளைப் பயப்பதாம். ஆங்கிலத்தில் Vernacular என்னுஞ் சொல்லுக்கு 'நாட்டிற் பிறந்த' (native) என்னும் பொருள் ஏற்பட்டது. ஏற்பட்டும், தாதுவின் பொருளிற் கேற்ப 'ஓர் இழிபொருள்' என்னும் தொனியும் உண்டாகி விட்டது. ஆகவே, ஒருவர் நந்நாட்டு மொழிகளை Vernaculars என்னும்போது, அவை இந் நாட்டுக்குரியன என்பதோடு நில்லாது, அவை தாழ்ந்த மொழிகள் எனுமொரு குறிப்பையும் தொனிக்கச் செய்கின்றார். சென்னைப் பல்கலைக் கழகம் (Madras University) சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ் முதலிய தென்னாட்டு மொழிகளை நடத்தி வருமியல்பை உய்த்துணரு மிடத்து அது அவைகளுக்கு Vernaculars என்னும் பேர் தந்திருப்பதன் உண்மைக்கருத்துப் புலனாகின்றது. இக்கழகத்தார் மொழிகளை Vernacular மொழிகளென்றும் கிளாசிகல் (classical) மொழிகளென்றும் பிரித்திருக்கின்றனர். சம்ஸ்கிருதம், லத்தீனம், அராபியம், கிரேக்கம் முதலியவை classical மொழிகளாம். தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலியவை Vernacular மொழிகளாம். 'கிளாசிகல்' மொழிகளுக்குப் பல வகையில் பெரு மதிப்புக் காட்டப் படுகின்றது. அவற்றை வாசிப்போர்க்கும் பலவகை வசதிகள் தரப்படுகின்றன. தமிழ் முதலிய ஏனைய மொழிகளுக்கு நாளுக்கு நாள் தாழ்மதிப்பே தரப்பட்டு வருகின்றது. இனித் தமி ழளவிற் பேசுங்கால் அதையும் 'கிளாஸிகல்' மொழியென மதிக்க வேண்டுவது நேரிய முறைமை. எப்படி யெனில், விளக்குவோம்: Classical என்னுஞ் சொல் Classicus என்னும் ஒரு லத்தீனச் சொல்லினின்றும் பிறந்த தென்ப. இது பண்டை ரோமா புரியின் முதல் தரக் குடிமக்களைக் குறிக்கும் classici என்னுஞ் சொல்லோடு இயைபுடையதாம். எனவே, இத னடியாய்ப் பிறந்த classical என்னுஞ் சொல் 'முதல் தரமான,' 'உயர்ந்த,' 'திருந்திய' என்னும் பொருளையே பயக்க வல்லது. ஆங்கிலத்தில் ஒரு ஆசிரியரை classical writer என்போமாயின், அவர் முதல்தரமான ஆசிரியரென்றே கூறினவ ராவோம். சில உயர்ந்த ஆங்கில நூல்

களை English classics என்று குறிக்கும் போதும் அவை உயர்தர நூல்கள் என்றே, சொல்லியதாகின்றது. ஆனால் சென்னைப் பல்கலைக் கழக வழக்கில், பேச்சு வழக்காறு இறந்துபட்ட உயர்தர மொழிகட்கு மட்டுமே classical languages என்னும் பெயர் பொருந்துவ தாகின்றது. இதனாற்றான் வழக்காறற்ற பெருமொழிகளுக்குப் பெரு மதிப்பு தமிழுக்கும் தாழ்ந்த மதிப்பும் காட்டப் பட்டு வருகின்றன. மேற் சுட்டியபடி 'உயர்தர மொழி' 'திருந்திய மொழி' என்பதுமட்டுமே 'கிளாஸிகல்' மொழியின் உண்மை இலக்கணமாயிருத்தலின், இவ்விலக்கணம் நிரம்பப் பெற்ற தமிழையும் அத்தகைய மொழியாக மதித்து நடத்துதல்நேர்மையும் அவசியமு மாகின்றது. இனியும் 'உலக வழக் கழிந் தொழிந்து சிதையாத' சீரிளமைத் திறம் வாய்ந்த செந்தமிழை 'கிளாஸிகல்' மொழியென்று சொல்லுதற்கு ஷெ கழக அகராதி மறுக்குமாயின், தமிழை living classical language (உயிரோடுள்ள உயர்தனிச்செம் மொழி) என்று கூறிப்போற்ற வேண்டுமென்று தமிழரனைவரும் வற்புறுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். தமிழ் ஒரு 'வெர்னகுலர்' மொழியென்று சொல்ல மறுத்தலும் அவர் கடன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் உயர்மதிப்பு இழிமதிப்புகளால் தமிழின் பெருமைகுன்றி விடப்போவதில்லையென்று எவரும் மனப்பால் குடிக்க வேண்டாம். ஒருவனுக்கு மூளையில் நோய் பிடித்தால் உடம்பு முழுதும் தடுமாற்ற முறுதல் போல, ஷெ கழகம் தமிழுக்குரிய மதிப்பைத் தர இசையாததினால் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் சிலஆண்டுகளாகத் தமிழுக்கு இழிவு பெருகிவிட்டது. கண் படைத்தோர் காணக் கடவர். காது படைத்தோர் கேட்கக் கடவர்.விரிப்பிற்பெருகும். செல்வாக்குடைய தமிழர்களும் உண்மை நாடும் ஏனைய பெரியோரும் இவ் வநியாயத்தை உடனே ஒழிக்க முற்படுதல் வேண்டும்.

நிலைமையை உள்ளவா றுணர்ந்த நன்மக்கள் பலர், கடந்த சில ஆண்டுகளாக இது பற்றிக் கிளர்ச்சி செய்து வருகின்றார்கள். பல்கலைக் கழகத்தின் பழைய விதிகளின் படி தமிழ் மாணவர்க்குத் தமிழும் அவர் உயர்தரப்படிப்பிலோர் கட்டாய பாடமாயிருத்தல் வேண்டு மென்றும்,

தமிழொன்றே கற்க விரும்புவார்க்கும் கழகம் போதிய வசதிகள் செய்து ஊக்க வேண்டு மென்றும், பல சபைகள் தீர்மானங்கள் செய்து மேலதிகாரிகட்குத் தெரிவித்துள்ளன. இம் முறையீடுகள் இது வரை செவிடன் காதிலூதிய சங்காயிருந்து வந்தன. இப்போது அக்கழக உறுப்புகளொன்றைச் சேர்ந்த அறிஞர்கள் மேற் குறித்த திருத்தங்களிலொன்றைச் செய்தல் வேண்டுமென்று தெரிவித் திருப்பதாகக் கேள்வி. அங்ஙனம் நிறைவேறின், தமிழ்ப்பேரிலக்கியங்களின் பெருமையை மாணவருணர்ந்து தாய் மொழி பேணுவர். இதற்கு வேண்டிய திருத்தங்கள் எல்லாம் நிறைவேறும் வரையில் தமிழ் மக்கள் விடா முயற்சியோடு ஒழுங்கான முறையில் கிளர்ச்சி செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

கழகத்தில் செய்ய வேண்டிய இத் திருத்தங்கள் மட்டுமே தமிழின் முன்னேற்றத்துக்குப் போதா. தமிழின் பண்டை யுயர்வைப் பாராட்டிப் பய னுறுவ தோடு இக் காலத்திற் கேற்ப அம் மொழி செழிப்புற் ருேங்குதற் குரிய முறைகளும் கையாளப்படுதல் வேண்டும். பாரதியார் கூறியாங்கு, நமக்குள்ளே மறைவாகப் பழங் கதைகள் பேசி மகிழ்வதிற் பயனில்லை. மற்றென் செய்யவேண்டும்? அப்புலவர் அருளியபடி உலக மதிக்கும்படியான "புது நூல்களை இயற்றுதல் வேண்டும்."

இதை வாசிப் போர்க்கு, 'இதென்ன பேராசை! பெருமை குன்றிய தற்காலத் தமிழகத்தில் வள்ளுவர், இளங் கோவடிகள், சாத்தனர், நால்வர், சேக்கிழார், கம்பர் முதலியோரை யொத்த பெரும் புலவர் விளங்குதல் கூடுமோ? என்னுமோர் ஐயந்தோன்றலாம். செந்தமிழ்ப் பரமாசாரியன் திருவரு ளிருக்குமேல் செந்நாப் புலவர் இன்றுந் தோன்றுதல் கூடும். இது எப்போது நிகழுமென்று நாம் கூறுமா றில்லை. ஆயினும் அத்தகைய பெரியார் வெளிப்போதற் குரிய ஆயத்தங்களைப் பலர்இன்றே தொடங்கிச் செய்தல் கூடும், செய்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆங்கில நாட்டில் ஷேக்ஸ்பியர் மகாகவி தோன்றிய நூற்றுண்டில் அவர்க்கு முன்னும் உடனுமாக அவர்க்குச் சிறி தேறத் தாழப் புலமை படைத்த பல ஆசிரியர்க ளிருந்தார் களென்று ஆங்கில நூற் சரித்திரத்தா லறிகிறேம். அப்

படியே திருக்குறள் தோன்றிய காலத்தும் கம்பராமாயணம் வெளிவந்த காலத்தும் பல திறப் புலவர் குழாங்கள் நிரம்பியிருந்தமை தமிழ்நூற் சரிதங் கற்ருர் அறிந்ததாம். ஆதலால் கருவிலே திருவுடைய புலவர் தோன்றுமுன் ஓதியுணர்ந்து புலமை படைப்பார் பலர் தோன்றித் தம்மா லியன்ற நற்ருெண்டுகளைத் தமிழுக்குச் செய்து வருதல் அவசியமே. இவ்வண்ண மிப்போது பெருந் தடைகளினிடையே சில மேலோர் தமிழ்த் தாய்க்குத் தம்மா லான பணி செய்து வருகின்றனர். அவர்கள் நன்முயற்சியால் எத்தனையோ பழைய தமிழ் நூல்கள் பரணை மீதிருந்தும், அடுப்பெரியி லிருந்தும், ஆடிப்பெருக்கி லிருந்தும், செல்லின் வாயிலிருந்தும், மீட்கப் பெற்று அச்சுவாகன மேறிப் பலர்க்கும் எளிதில் காட்சி தந் துலவுகின்றன. இப்பெருநூல்களைச் கற்றற்குத் துணைசெய்ய வல்ல உரை நடைப் புத்தகங்கள் பல வெளிவருகின்றன. இவற்றை ஒரு வகையில் தழுவிச் செல்லும் நலமுடைய புது நூல்கள் சிலவற்றையும் காண்கின்ருேம். மாதப் பத்திரிகைகளும் வாரப் பத்திரிகைகளும் தம்மாலியன்ற நன்மையைத் தமிழுக்குஞ் செய்து வருகின்றன. பழைய தமிழ்நூல்களை இக்காலத்திற் கேற்ப எளிய நடையில் வரைந்துதவும் வேலை இன்னுஞ் சில நாளில் ஓய்வடைய வேண்டியதாகும் போல் காண்கின்றது.

ஆனல் மற்றுமோர் துறையில் தமிழுக்குச் செய்ய வேண்டிய வேலை மிகுதியா யிருக்கின்றது. இதையுஞ் செய்யாவிடின் தமிழ் இக்காலத்திற் கேற்ற வளப்பத்தோடு திகழுமா றில்லை. இப்பணியைச் செய்தற்குக் கருவிலே திருவுடைய புலவர் பெருமக்கள் வேண்டாம். போதிய தமிழ்ப் பயிற்சியோடு அரச மொழியாகிய ஆங்கில மொன்றில் தேர்ச்சிபெற்ற அறிஞரே சாலும். இப்பணி, மொழிபெயர்ப்பு வேலையே யாகும். இது தமிழ் நாட்டிற்குப் புதியது மன்று. தமிழில் இப்போது மதிப் பிழந்து கிடக்கும் புராணங்களிற் பல வடமொழி நூல்களின் வழிநூல்களும் சார்பு நூல்களுமே யாகும். நேர் மொழிபெயர்ப்பான சாத்திரங்களும் பல வுள. இன்றும் சில உயரிய வடமொழி நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப் படுகின்றன. இந்நாளில் தமிழ் வளமுற வேண்டில், ஆரி

யத்தில் மட்டுமன்றி, கிரேக்கம், லத்தீனம், பாரசீகம், ஆங்கிலம், ஜெர்மானியம், இத்தாலியம், பிரெஞ்சு முதலிய பிறநாட்டு மொழிகளில் தலைசிறந்து விளங்கும் நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்துக் கொள்ளல் வேண்டும். அன்றியும் தெலுங்கு, பங்காளி, ஹிந்தி, மராத்தி முதலிய நந்தேய மொழிகளிலும் பெருமை பெற்றிலகும் பெரு நூல்களையும் அவ்வாறே பயுன்படுத்திக் கொள்ளல் வேண்டும். 'தமிழில் எல்லா முண்டு; மொழி பெயர்த்துக் கோடற்கு அவசிய மில்லை' என்று சில அன்பர் எண்ணுதலுங் கூடும். உயிர்க்குறுதி பயப்பனவாய ஒழுக்க நூல்களும் தோத்திர சாத்திரங்களும் தமிழில் நிரம்பியிருப்பது மெய்யாகலாம்; ஆனல் பூதபௌதிக அறிவு நாளுக்கு நாள் வளர்ந்து மக்கள் வாழ்க்கை யியல்பையே நன்மைக்குந் தீமைக்குமாக மாற்றிவரும் இந்நாளில், அவ்வறி வராய்ச்சிகளைப்பற்றித் தமிழர் தெரிந்து கொள்ளாதிருத்தல் அவர்கள் முன்னேற்றத்திற்குத் தடையாம். ஆதலின் அத்தகைய நூல்களும் தமிழில் வெளி வருதல் வேண்டும். சரித்திர நூலாராய்ச்சி மொழியாராய்ச்சி, அரசியல், மேனுட்டுத்தத்துவ வாராய்ச்சி முதலிய துறைகளிலும் மேனுட்டறிஞர்கள் தெரிவிக்குஞ் சீரிய கருத்துக்களைப் புதியன புகுந்து கொண்டுவரும் இக்காலத்தில் தமிழருமுணர்தல்வேண்டும். இவ்வாறு மேனுட்டறிஞரிற் சிறந்தவர்கள் கண்டு பிடித்துரைப்பவைகளைத் தமிழ ரறியவேண்டுமென்பது அவற்றை யெல்லா மவர் அப்படியே வேதமொழியாகக்கொள்ள வேண்டுமென்று கூறுவதாகாது. இந்நாட்டுப் பண்டைமுதறிஞர் கொள்கைகள் சில இந்நவீன வாராய்ச்சிகளால் புதுவிளக்கம் பெறுதல் கூடும். உலகத்தின் பல் வேறு தேயங்களைப்பற்றி யறிதலால் அறிவு விசாலமெய்தும். உயரிய புது நூல்கள் தமிழில் வெளி வர ஒரு வழி பிறக்கும்.

இவை போன்ற நன்மைகளை நாடியே இங்கு மொழி பெயர்ப்பு வேலை பெரிதும் வற்புறுத்தப் பட்டது. எனினும் பிறமொழிகளிலுள்ள உயரியனவும் தமிழ் நாட்டார்க்குப் பயன் தர வல்லனவுமான நல்ல நூல்களை மட்டுமே மொழிபெயர்த்தற்காசை கொள்ளவேண்டு மென்றும் பிரித்தோத வேண்டியிருக்கிறது. ஏனெனில், ஆங்கிலத்

திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப் புக்கார் சிலர் அம் மொழியிலுள்ள சில இழிந்த நவீனங்களைத் தமிழ்ப் படுத்தித் தமிழிளைஞர் மனதைக் கெடுத்துள்ளார் ஆதலால் என்க.

தமிழ்மொழி வளர்ச்சிக்காகச் செய்ய வேண்டிய வேலைகளில் இங்கு இரண்டே விளக்கப்பட்டன. மற்றும் பல வுள. தமிழ்நாட்டு மடங்களில் தமிழ்க் கல்வி முன்பு போல் பேணப்படல் வேண்டும். சபைகளில் முறையாகத் தமிழ்க்கல்விப் பயிற்சி நடைபெறவேண்டும். சங்கஉறுப் பினர்க்குச் சொல்வன்மையிலும் பயிற்சி தரப்படவேண் டும். ஜில்லாக் கல்விச் சங்கங்களின் பார்வையில் வேலை செய்துவரும் தமிழ்ப் பாடசாலைகளில் தமிழைச் செவ்வை யாய்க் கற்பித்தற்கான வசதிகளைக் குறைவறச் செய்து தருதல் வேண்டும். தமிழ் கற்றுரை நன்கு மதித்து, அவர் கள் நல்ல நூல்கள் எழுதும்படிக்கு வெகுமதிகள் பட்டங் கள் மூலமாக ஊக்கமளிக்கவேண்டும். அன்றியும், இந் நாளில் தமிழைப் போதிய வளவு கல்லாதார் பலர் ஊதி யங் கருதி இலக்கண வரம்பிகந்த பல நூல்களைத் தமிழில் எழு விலைப்படுத்தித் தமிழ் மொழிக்குச் சூழுங் கெடுதியைக் குறைப்பதற்காக, அதிகாரம் பெற்றதோர் தமிழ்ச்சங்கம் நிறுவுதல் வேண்டும். இச்சங்கத்தின் அங்கீகாரம் பெற்ற நூல்களையே மாணவ மாணவிகட்குப் பாடபுத்தங்களாக வைக்கலாமென்னும் கட்டுப்பாடும் ஏற் படுதல் வேண்டும். பொதுஜனங்களும், சங்கமேறிய நூல் களுக்கே மதிப்புத் தரும் பண்டை வழக்கத்தை மீட்டும் உயிர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் தமிழ் நூலைத் தன்னுயுள் காறும் கற்றல் கட னெனக் கொள்ள வேண்டும். தமிழில் வெளியாகும் நல்ல நூல்களை இயல்வது கரவாது விலைதந்து வாங்குதலும் கடமையெனக் காணவேண்டும். இவைபோன்ற செயல் கள் இன்னும் பலவுள.

இங்ஙனமெல்லாஞ் செய்தற்குத் தமிழரிடத்துத் தாய்மொழிப் பற்றிருக்க வேண்டுவது அவசியம். தாய் மொழிக்கு நேர்ந்த இழுக்கு தமக்கே நேர்ந்ததென்று உணர்ந்து மேனிலையெய்த முயல வேண்டும். இப்பற்று சில தலை முறைகளாகவே குறைந்துவிட்டது. சங்க

கால இலக்கியங்களாலும் இடைக்கால நூல்களாலும் இனிது வெளியாவதும், முக்காலத்திலும் இந்நாட்டின் முன்னேற்றத்திற் கின்றியமையாததுமாகிய இப்பற்றைச் சாதிமத வேற்றுமை யின்றித் தமிழ் பேசுவோ ரனைவரும் வளர்த்துத் தங் கடமையைச் செய்தல் வேண்டும். தமிழ் நாட்டில் வேறு வழியில் ஒற்றுமைப் படுத்த முடியாத பல மக்கட்கு, அவரனைவர்க்குந் தமிழே தாய் மொழியாயிருக்கு முண்மையைக் காட்டி அவர்களுக்குள் ஒற்றுமை யுணர்ச்சியை வளர்க்க முயலுதல் நன்மை.

'இவை யாவும் பெருஞ் செயல்களாதலால் நம்மால் என்ன முடியும்; எல்லாஞ் சிவன் செயல்' என்று வறிதே புலம்பிச் சோம்பித் திரியலாகாது. "அருமையுடைத் தென்று அசாவாமை வேண்டும்." "ஆக்கம் அதர்வி னுப்ச் செய்யும், அசைவிலா ஊக்க முடையா னுழை" என்ற பொய்யில் புலவன் பொருள் மொழி தேர்தல் வேண்டும். யாவுஞ் சிவச் செயலென்பது, எச்செயலும் சிவ சந்நிதி யாதாரமின்றி நடைபெறாது என்ற வளவில் மெய்யே. அச்சிவன் "நானேது மறியாமே என்னுள் வந்து, நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்" என்ற அப்பர் திருவாக்கின்படி நமக்கு நன்மை தீமை யியல்பையும், பயனையும் புலப்படுத்துகின்றான். அதையும் சிவச்செயலாய்க் கொண்டு அதன் வழி நடக்க முயலுவதையே நம்மிடமிருந்து அச்சிவன் எதிர் பார்ப்பது. ஆதலால் யானெனதென்னும் உணர்ச்சியுடைய எம்மகனும், தன்னிலைமைக்குரிய கடமைகளைச் செய்யும் பாரத்தைச் சிவன் தலையில் ஏற்றி விடப் பார்த்தலில் பயனில்லை. சிவச்செயல் பல சீவர் மூலமாய் வெளியாகின்றன என்பதையும் மறக்கவொண்ணாது.

பிற நாடுகளில் நம்போன்ற மக்கள் பல பெருங்காரியங்களைத் தொடங்கி, தம்முயற்சியைத் தடுக்கும் தோல்வி, துன்பம், மரணம் முதலிய இடர்ப்பாடுகளால் தளர்வுறாது பாடுபட்டு, எண்ணிய எண்ணியாங் கெய்து கின்றனர். காணமுடியாக் கௌரி சங்கரத்தைக் காணுதுவிடேம் என்று சிலர் மீண்டு மீண்டும் பனிமலைமீது படையெடுத்தல் எத்துணை மனோதிடத்தைக் காட்டுகிறது? மேனாட்டார் தம்

மொழிக்குச் செய்து வரும் வேலையும் சாலப் பெரிது. அளவிடற் கரிய ஆராய்ச்சிப் பயனுய் ஆங்கிலேயர் இப்போது தொகுத்துள்ள அகராதி யொன்றின் அருமை பெருமைகளைத் தற்காலத் தமிழர் அறிவரேல் திகைப்புற்று வெள்குவர். ஆங்கிலத்தில் பத்திரிகைகள் நாடோறும் இலக்கக்கணக்கில் வெளியாகின்றன. ஆங்கிலப் புலவர்கள் எவ்வளவோ செல்வாக்குடையரா யிருக்கின்றூர்கள்? நம் நாட்டிலேயே தெலுங்கரும் வங்காளிகளும் தத்தம் மொழிகளை எவ்வளவு விரைவாகச் செம்மை செய்து வளம்படுத்தி வருகிறூர்கள்?

வெளிநாட்டின் மேன்மை இவ்வாறிருக்க, நந்நாட்டார் நிலைமை எவ்வாறுள்ளது? பிச்சைக்காரர் நீங்கிய பிறரில் பெரும்பாலோர் தம்மளவில் அருந்தல் பொருந்தலாதி களியாட்டங்களிற் காலத்தைக் கழித்து மாளுகின்றனர். “மண்ணிடைக் குரம்பை தன்னை மதித்து நீர் மையலெய்தில் விண்ணிடைத் தருமராசன் விரும்பினல் விலக்குவாரார்”? என்று திருநாவுக்கரசு சுவாமிகள் கேட்குங் கேள்விக்கு என்ன பதில் இவர் அளிக்க வல்லார்? “என்கடன் பணி செய்து கிடப்பதே” என்று அவ்வடிகளார் அருளிச்செய்துள்ளபடி ஒவ்வொரு தமிழனும் தன் கடவுளுக்கும் அடியாருக்கும் சமயத்துக்கும் தாய் நாட்டுக்கும் தாய் மொழிக்கும் தன்னுலியன்ற பணியைச் செய்ய முற்பட வேண்டுமன்றே? நம் பின் சந்ததியார் நன்மையின் பொருட்டு நாம் இத் தலைமுறையிற் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யா தொழியலாகுமோ? இந்நாட்டில் எத்தனையோ துறைகளில் உழைப்பதற் கிட மிருக்கிறது, நாற்புறமும் பசி, பிணி, அறியாமை, அன்பின்மை, துன்பமாகிய குறைபாடுகள் மல்கிக் காண்கின்றன. இவற்றிடையே மனக்கவலை யின்றி மகிழ்ந் துண்டுத்து வாழ்க்கை இனிதென்போன் மக்கள் பதடியே யாவன். எவ்வளவுக் கெவ்வளவு நம் நலத்தை மறுத்துப் பிறநலத்தை நாடிச் செருக்கின்றிப் பணிவோடு உழைக் கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு திருவருட் சத்தி நம்பால் பதிந்து வளரும். உல கின் புறக் கண்டு நாமும் இன்புறலாம். “அறிவினுன் ஆகுவதுண்டோ பிறிதினேய் தன்னேய் போற் போற்றுக் கடை”? ஆதலின் தமிழ்ச் சோதரர்காள் எழுமின்! எழுமின்!!

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்றதைக் கடைப் பிடித்துத் தமிழ்த் தாய்க்குத் தமிழ் பேசு மெல்லோமும் நம்மாலான பணிகளைச் செய்வோமாக. வித்தகம் பேசலில் விளையு நன்மை யொன்று மில்லை. 'தனக் கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்னுஞ் செம்மொழி நம்மகக்கண்ணை விட்டகலாது நின்று, நம்மிடத்து உயரிய நோக்கும், சீரிய சொற் சொல்லும் தோற்று விப்பதாக. 'என்றுமுள தெனறமி' ழுக்கு இஞ்ஞான்று வேண்டுவன செய்து இசை கொள் வோமாக.

செந்தமிழ்த் தாயின் சேவடி வெல்க.

---

ஈதன் அல்லன் என்ற ஒரு அமெரிக்கர் ஒரு வக்கீலினிடம் சென்று, என் பேரில் வியாச்சிய மொன்று தொடரப் பட்டிருக்கிறது நான் பணம் கொடுக்க வேண்டியது உண்மையே. எனினும் தற்சமயம் கைவசம் பணமில்லை. முயற்சி செய்கிறேன். ஒரு மாத வாயிதா கேட்கவேண்டும் என்றார். வக்கீலும், அதற் கென்ன அப்படியே யென்று சொல்லி விட்டார். மறு நாள் நீதி சபை கூடியதும் வக்கீல் எழுந்து, நீதிபதியே! இந்தப் பத்திரம் சரியானதில்லை. பொய்க் கை யெழுத் தென்று அபிப்பிராயப்படுகிறேன். இதை ரூபிக்க என் கட்சிக் காரருக்கு ஒரு மாத வாயிதாக் கொடுக்கவேண்டு மென்று முடித்தார்.

அங்கு ஈதன் அல்லனும் ஒருமூலையில் உட்கார்ந்திருந்தார். உடனே அவர் உரத்த சத்தத்துடன் மிஸ்டர் ஜோன்ஸ் (வக்கீல்) பொய் சொல்வதற்காகத் தங்களை வாடகைக்கு நான் அமர்த்தவில்லை, அது உண் மையான பத்திரம். என்னுடைய கையெழுத்தென்று நான் சத் தியம் செய்வேன். பணமும் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். தாங்கள் மத்தியில் புரட்டு ஒன்றும் செய்யவேண்டாம். பணம் கொடுக்கச் சில நாட்கள் தாமதமாகு மென்று சொன்னேனே யொழிய மெய்யைப் பொய்யாக்கத் தங்களை அமர்த்தவில்லை யென்றார். நீதிபதி யும் அவர் கேட்ட படியே சிலகாலம் ஒத்திவைத்தார்.

***

அப்ராஹம் லின்கன் என்றவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவ ரா யிருந்தவர். இவர் வக்கீல் தொழில் நடத்தும் போது உண்மை யான கேஸ் என்று இவருக்குத் தெரிந்தா லொழிய எந்த வழக்கையும் எடுத்துக்கொள்ள மாட்டார். ஒரு கேஸை வாங்கி விட்டுப் பொய் யான கேஸென்றுபின்பு தெரிந்து, நடத்த முடியா தென்று மறுத்து விட்டார்.

---

# பெண்டிர் உரிமை நலம்.

நம்மவர் பெண்டிரைப் பெரிதும் சிறுமைப் படுத்துவதாயும், ஆடவரோ டொத்த உரிமையுடையாராய பெண்பாலரை நாமுரிமைகளை மதித்து மதியாமல் நடத்துவதால் நமது சமுதாய முன்னேற்றம் தடைப்படுவதாயும். நல்லெண்ணமும் நல்விருப்பமு முடைய நண்பர் பலர் முறையிட்டு மன்றாடக் காண்கின்றோம். இது பெரிதும் கவனிக்கவேண்டிய தொன்றேயாம். தமிழகத்தில் பெண்டிருரிமை யிழந்து தம்மியல் வள வளர்ச்சி குன்றுவரேல், தமிழச்சமுதாய வளமும் நலமுங் குன்றுவ தொரு தலை. மகளிர் வளம்படாச் சமுதாய வாழ்கை வளர்வதில்லை. இருபாலவரு மொத்து வளம்பெருக்கி வாழுஞ் சமுதாயந் தான் முன்னேற்ற மடையும். பண்டைத்தமிழ்ச் சரித வாயிலாயும், ஆன்ற தமிழ்முது நூல்களானும், தமிழர் தங்களுள் மகளிரைத் தாழ நடத்தியதாக் கண்டிலம். பிள்ளைகளைப்போலவே, பெண்களையும் நன்கு மதித்து, நலங்கருதி வளர்த்து, இருபாலோரிடத்து மொத்தவளமும் உரிமையும் மதிப்பும் பேணிவந்த தமிழ் முதுமுறை தற்கால மாறியுள்ளதா? சிறப்பும் சீருமிறப்ப நாம் பெண்டிருரிமை போற்றுங் கடமையைத் துறந்து நமது சமுதாய நலங் குன்றத் தவறிழைப் போமா? குறை நம்மிற் காணில், நெற்றிக்கண் திறப்பினுங் குற்றமே குற்றமேயாமென்று நெறிதிறம்பாம லறம்பேசு மியல்புடைய தமிழராய நாம் நம்பாற் கண்ட குறையுணர்ந்து கடிந் தொதுக்க அஞ்சமாட்டோம். ஆனால் நமது சமுதாய முறையிற் பிறர் சொல்லுங் குறைகளென்ன? அவை யனைத்துங் 'கடிந்து களையத்தகுங் குறைகளேயோ? அன்றேல் சில குறையும், பல வுண்மை தேரா நன் முறையுமா? என்பனவற்றை நாம் சிறிது ஆழச் சிந்திக்க வேண்டும்.

(2) முதலிற் பெண்டிரு மாடவருங் கொண்டாடு முரிமைகளெல்லாம், சமத்துவங் கருதுவதொன்று; ஒருமை கருவதொன்று; ஆக இருவேறு நோக்கி னின்றாராயக் கிடக்கும். உரிமை, சமத்துவத்துக்கு, உரிமை யொருமை அல்லது உரிமை யொற்றுமை இன்றி யமையாத தல்ல. மகளிர்க்கு நம்மோடு சரியுரிமை யுண்டு. இதை மறுப்பவர் மிகச் சிலரேயாம். மக்கட் சமுதாயத்தில், அனைவருக்குஞ் சரியுரிமை யியற்கை முறை. ஆனால் ஒவ்வொருவரு மொரே படித் தான வுரிமைத்துறை தேடுவது இயற்கைக்கும் சமுதாயப் பொது வாழ்க்கைநலத்துக்கும் பொருத்த மற்றதாகும். சமுதாய மக்கள் தத்த மியல்புக்கும் களன் துறை காலங்களுக்கு மேற்றபடி பல முறைகளில் முயன்று வளம் பெருக்குவதாலே சமுதாய நலம் வளருமன்றி, யாவரு மொரே படியினின்று ஒன்றையே விரும்பி விடாது மேற்கொண்டு வாழும் சமுதாயம் வளங்குன்றித் தாழாது சிறப்பதரிது. தத்தமியல் நலம் வளர்த்தலே மரபும் அறமுமாகும். அவரவரியல் நல வளர்ச்சிக்கு வேண்டியவாறு இடமுந்துறையு மமைப்பதே சமுதாய நோக்கமுங் கடனுமாக வேண்டும். அத்தகைய விடந்துறைக

ளமையாவாறு இடைப்படுந் தடைகளைத் தாழாது விலக்கியும், அவைகளை அனைவருக்குங் கிட்டுமாறு ஒல்லும் வாயெல்லா மோவாது முயன்றமைத்தும் வருஞ் சமுதாயந்தான் சிறந்த வளம் படும். மற்றப்படி சரியுரிமையும், தத்தமியல் நலத்தை வளர்க்கு முட்டில் முயற்சிக்குக் குறையா விடனமைப்பு மேற்பட்டுள்ள சமுதாயத்தில், உரிமை யொருமை ஒவ்வொருவருக்கு மேற்படாதது குறையன்றென்பது மட்டுமில்லை; அவ்வாறு ஏற்படாமையே அழகு மபிவிர்த்தி வன்மைக் கறிகுறியு மாகும்.

(3) எத்துறையும் எத்தொழிலும் எல்லோர்க்கும் பொருந்துமென்பது உண்மைக்கும் இயற்கைக்கு முரணாகும். பால் வேறுபட்ட பெண்டிர் திறம் நிற்க. ஆடவர் தம்முள்ளும், அனைவருமெல்லாவற்றையு மேற்கொள்ள லேலா விசையா வீண் முயற்சியாகும். தத்தந் திறம், விருப்பம், துணை, முதலிய கருதி, காலமிடங் கருவியாதிகளைச் சிந்தித்து, வினையும் பயனுஞ் சீர் தூக்கி, ஏற்பன மேற்கொண்டிசைவில விலக்குவதே யறமு மறிவு மாகும். மேற் கொள்ளுவனவெல்லாம் நன்மை தருவன வாகவே ஆய்ந்து கொள்ளற் பாற்று. ஆனால் நன்மை தருவன வனைத்தையு மேற்கொள்ள லாகாதாம். சமுதாய வாழ்வுக்கின்றியமை யாதனவு முபகாரமாவனவுமான பல நூறு தொழிலெல்லாம் நல்லனவேயாம். எனினவை யாவற்றையும் யாரேனுஞ் செய்ய விரும்புவதுண்டோ ? விருப்பமுந் திறனுங் கொண்டெத்தொழிலு மேற் கொள்ள லாகாது. நீண்ட பயிற்சியும் நிலைத்த துணைச்சார்பு மின்றி திட்டமுஞ் செவ்வியுமெய் தொணாத தொழில் பல வாகலான், அவ்வவற்றிற்கு வேண்டியதும், உதவுவதும், பொருந்துவதுமான வியற்றிறன் துணைவளம் பெற்றுள்ளளவே, அவ்வவற்றை மேற் கொள்ளவேண்டியதாகும். அதுபற்றியே தொழில் வேறுபட்ட மக்கட்டொகுதிகள் பல கூடிச் சமுதாயமாகி நின்று நிலைக்கக் காண்கின்றோம். இவ்வாறு எவனு மெத்தொழிலையுமேற் சொள்ள வுரிமை கொண்டாடுவது பொருந்தாததோடு, தீப்பயன் தருவதாகவுமுடியக்கூடு மென்பது தெளியக்கிடப்பதால், பால் வேறு பட்ட பெண்டிர் தம்மியலுக்குப் பொருந்தா ஆடவர் வினை களனைத்தையுமுரிமை கொண்டாடி மேற் கொள்ள முன்வருவராரா? மேற் கொள்ளுவது நலந் தருமா? மெல்லியலாரை வன் கொடுந்தொழிலுரிமைக் காளாக்குவ தாடவர்க் கடுக்கு மா? பெண்டிர்க்குப் பொருந்தாவினையுரிமை தரவேண்டாச் சமுதாயத்தை யது பற்றிக் குறை கூறலாகா தன்றே.

(4) மேனாட்டவரைப் போல வினையனைத்தினும் புருடரோடு புகுந்து விரவவிரும்பா நம்மடவார், வேறு சில ஆசிய ஆபிரிக்க ஜாதியரிற் போலப் பால் பற்றி யவமதிக்கப் படுவதுமில்லை. இயலிலும், இயல் பற்றி வினைமையிலும்,இயல் வினைகாரணமாகச் சில வுரிமைகளிலும் வேறு பாடுளதேனும், தமிழ்ச் சமுதாயத்தில் ஆடவரோடொப்புரிமை பெற்று மகளி ரொருங்கு மதிக்கப் படுவாராவர். பாலும்,

# பெண்டிர் உரிமை நலம்

இயல்பும் பற்றி விதந்து வேறுபடுந் துறைகளிலன்றி, மற்றைப்
பொதுமை முதலியன யாவற்றினும் நம்மிலிருபாலவரு மொருபடி
நிற்கக்காண்போம். பெண்டிர்க்கு நாம் சமத்து வத்தை மறுப்ப
தில்லை. நம்மோடவர் பல பொதுத்துறைகளிலும் சரி நிலை நிற்ப
தோடமையாமல், சில தனித்துறைகளில் தலைமை பூண்டு மேம்
படவும் காண்பேம். ஒரு சமுதாய வுணர் வொழுக்கங்களை, அச்
சமுதாய மொழியிலடிப்பட்டான் றவழக்கினிற்குஞ் செம்முதுசொற்
களா னன் கறியலாகும். நெடுவழக் கி னின்றழியாச் சிறு சொற்கள்
அவற்றின் பொருளும் ஆட்சியுங்காரண முறையா னாகி யாய்வாருக்கு,
அம்மொழிகளை வழங்குஞ் சமுதாய வொழுக்கமுந் தொன்னிலையும்
பொதிந்துள சரிதச் சிறு பண்டாரங்களாகி யுதவும். "தலைவன்
தலைவி"—"அரசன், அரசி,"—"பெருமான், பெருமாட்டி"—
"கிழவன் (சரிமையாளனென் பொருளில்,) கிழவி"—"இறைவன்,
இறைவி"—"நம்பி, நங்கை"—என்ற பல விடத்தும் புருடரொடு
பெண்டிர்க் கொத்த நிலையுரிமை காண்போம். மதிக்கப்படும் புறத்
துறைகளில்இருபாலவருஞ் சரியுரிமையுடையாரென்பதை அவ்வுரிமை
விளக்குஞ் சொற்க ளொத்தமைந்துள தாற் றெளியலாகும். இனி மக
ளிர் சிறப்புரிமைக் கிடமாய துறைகளில் வழங்குஞ் சில சொற்களை
யாராய்வோம். மனைமாண்பு சிறக்குமாறு அகத்துறைகளில் தலைமை
யதிகாரமுடையார் பெண்டிரென்பதும், மனையறத் தலைமை யுரிமை
யவர் மேற்றே யென்பதும், "மனைவி," "இல்லாள்" என்னுந்
தொல்லைத் தமிழ் மொழிகளுக்கு நேரான ஆண்பால் வழக்கின்மை
யொன்றே விளக்கும். மனையாட்சிக் குரியாள்—இல்லத்துறைகளி
லிறைமைக் குரியாள்—என்னும் பொருள்பட, "மனைவி," "இல்லாள்,"
எனவழங்குந் தமிழ்ச் சொற்களுக்குச் சரியாக, "மனைவன்—"இல்
லான்" என வழங்கு முறை கிடையாது; இப்பொருளி லாண்பா
லொரு சொல்வழக்கின்மை நோக்கின் அவ்வுரிமை மகளிர்க்கே சிறப்
பாதலு மாடவர்க்கதி லொப்புரிமை கூடவின்மையுமே தமிழர் முது
வழக்காதலானிவ்வாறு சொற்களமைந்துள்ளன வென்பதன்றிப் பிறிது
காரணங் காண்பதரிது. இயலும் பொருத்தமு நோக்கி யிவ்வாறகத்
துறையில் முதலுரிமை மகளிர்க்காக்கிய தமிழர், வன்மையுந் துன்ப
முஞ் செறிந்த புறத்துறையிற் சிறந்த போர் முதலிய சில வற்றுள்
முதற் கடமை மேற்கோளற் குரியார் புருடரேஎனவகுத்து அம்முறை
விரும்பி மேற்கொண்டொழுகியுள்ளார் என்பதையுமவர் மொழியில்
வழங்குஞ் "செம்மல்"—"பொருநன்"—"செருநன்"—முதலிய
சொற்களா னறியலாகும். இச்சொற்களுக்கு சரியாக, போர்த்தொழி
லுரிமையைப் பெண்டிர் பாலாக்கும் பொருளுடைய பெண்பாலொரு
சொற்கள் தமிழ் வழக்கி லின்மை தெளிக. மெல்லியலார்க்குச் சில
புறத்துறையில் சரியுரிமை நேராத் தமிழ்ச் சமுதாயத்தி லாடவரை
விடச் சிறப்புரிமையவர் தன்மைக்குப் பொருத்தமான அகத்துறை
களி லமைந்துள்ளதைக் காணுங்கால், சமுதாய வாழ்க்கையில் மகளிர்க்
கொத்த மதிப் பு தவாத் தவறுடையார் தமிழரென்ப தெப்படிக்
கூடும்?

(5) அன்றியும், மிகச் சில துறைகளில் மட்டு மிப்படிப் பாலும் இயலும் பற்றிச் சிறி துரிமை வேறு பா டிருபாலவர்கரும் அமைத்து வைத்தாலும், விசேஷ வேறு பாடுகள் வேண்டாப் பல பொது நிலைத்துறைகளிலு மிரு பாலவர்க்குஞ் சரியுரிமை யுண்மையே வற்புறுத்தப் படுகின்றது. வருந்திப் பொருளீட்ட லாடவர்க்கும், மனையாட்சி திருந்தநிலை நிறுத்தல் மடவார்க்குஞ் சிறப்புரிமை யென வகுத்தமைந்த தமிழ்ச் சமுதாயத்தில், மற்றைப் பொது நிலையில், ஒத்த மதிப்பும் சரியுரிமையும் புருடரைப் போலவே பெண்டிர்க்குமுண்டு. பொருளுடைமை, கல்வி, ஞானம், மணமுறை, தெய்வ வழிபாடுகளிலெல்லா மிருபாலார்க்குள்ளு முரிமை வேறுபாடு கிடையாது. சமீபத்தில் "மனைவியர் பொருட்சட்டம்" (married woman's Property Act) ஏற்படும்வரை, மணந்த மகளிர்க்குப் பொருளுரிமையே கொடாது மறுத்த ஆங்கிலரைப் போலன்றி, தொன்று தொட்டு நம்மவருள் மடவார் பொருளுரிமை பெற்றுவந்திருக்கின்றனர். இன்னும் பழம் பெருங் கலாசாலைகளிற் பெண்டிரைப் படிக்க விடாத மேனாட்டவரைப் போலன்றி, ஒளவையரும், ஆண்டாள்களும், நச்செள்ளை, காக்கை பாடினி மாரன்ன பலபெரும் பாவலருங் கல்விக் களஞ்சியங்களாகச் சங்கமேறி வீற்றிருந்தும், மன்னர் மன்றங்களில் மதிக்கப் பெற்றும், கல்விநிலையங்களைக் கவர்ந்திருக்கின்றனர். காரைக்காலம்மையார் போலச் சமயநெறி சிறக்க, பக்திமுறை தழைக்கப் பாடிய பெண்டிரும் பலருண்டு. அரசியலுரிமைகளிலுங் கூடக் குறை சுமத்தப் பட்டதில்லை. ஏற்புழி யிறைமை வகித்து, முறை புரிந்த முதுக்குறைவுடைய பெண்டிருஞ் சிலரல்ல. மதுரை நாயகியான தடாதகைப் பிராட்டியும், புகழேந்தி பாடிய அல்லியும், நமக்கண்மைக் காலத்தில் அரசு நடாத்திய மங்கம்மையும் போதிய வுதாரணமாம்.

(6) இருபாலார்க்குஞ் சிறப்புரிமை யமைந்துள்ள சிற்சில துறைகளிலுங் கூட, ஒரு பாலார்க்குச் சிறந்த வுரிமை மற்றவர்க்கு விலக்கில்லை. இயலுந் திறனும் பற்றி யொரு பாலார்க்குச் சிறந்ததான வுரிமைகளைச் சில சிறப்புக்காரணம் பற்றி மறு பாலவர் மேற்கொள்ளில், அது வரை வின்மை யாவதோடு, பண்பும் பயனுங் கருதி யமைத்துக்கொள்ளப் படுவதுமாகும். வாழ்க்கைத் துணைவரில்லாக்காலத்தில் வந்த பகைவரை யெதிர்த்துச் செருமுனையிற் பொருதமகளிரையும் தேசநன்மை செய்த வுபகாரிகளாகவே தமிழுலகம் போற்றியிருக்கின்றது. புறத்துறைகளிற் றோள் வலியாலும், தாளாண்மையாலு மாளுந் தன்மைக் குரிமை பற்றி யாடவராயினோர், தம்மனையறஞ் சிறக்க இல்லத்தையாளும் பெட்புடைமையாற்பேணத் தகும் பெண்டிரைப் பெரிதுமதித்துப்பாராட்டிப் பேணல் கடன். இத்தகை பற்றியே, மெல்லியலாரைப் பெண்மைத்திறஞ் சிறத்தல் சுட்டிப் பெண்டிரென விசர்ந்து பேணிப் பேசிய தென்ப வான்றமிழ் வாணர். எனவே தமிழகத்தில் அடிப்பட்ட நல்ல முறை பெண்டிர் புருடரோ டொக்க நன்குமதிக்கப்படுவதேயாமென்பது தெளிவாகும். இளமை மணம், மறு மண மறுப்புக்களாற் பெண்டிர் பீடிக்கப்படுந்

# பெண்டிர் உரிமை நலம்

தற்காலக்குறைவுகள், பண்டைத் தமிழ் வழக்கின்றியிடைப்பிறவரலா யெழுந்துள்ளன. கைமை நோற்றுஞற்றி வாழு முயவற் பெண்டிரு மல்லேம் ; காதலனிறந்த தற்காக நீர் வீழ்ந்தும் நெருப்புப் புகுந்தும் கசப்பான கைமைதவிர்க்க வேண்டுஞ் சிறுமைப் பெண்டிரு மல்லேம்; துணைவ னுயிர் துறத்த லறிந்தவுடன் உயிர்தானே கழியு மூதானந்த முது சீர் முறையுடையேம் நாமென்று, செயலின்றி விருப்பாலுயிர் துறக்கவல்ல கற் பரசிகளிருந்த தமிழ் நாட்டில் மணவினைப் பொருளு மறியா இளமைக் காலத்தில் மகளிரையவர் விருப்பமறியாமல் மணம் புகுத்தி, வாழ்க்கை மணமறிய மலராமுன், கைமைச் சிறைக்கிரை யாக்குவது, அறத்துறைக்கடாதது போலவே தமிழ் முறைக்கு முரணு வதேயாம். இத்கைய இடையெழுந்துள்ள வடாக் கொடுமைகளைவிரை வில்கல்வி முதலிய அறத்துறைகளால் அகற்ற வேண்டிய தவசிய மேயாகும். ஆனாலிச் சில புது முறைகளைக் கொண்டு மட்டும் நம்மவர் பெண்டிரை மதியாததாகக் குறை கூறுவதும் பொருந்தாது. நம்ம வர் தொல்லை யாசாரங்களை நடுநிலை நின்றா ராய்ந்து, நமது நாட்டு வழக்க வொழுக்கங்களை நமது நலங்கருதி திருத்திக் கொள்ள வேண்டு மென்பதை யாரு மறார். பெண்டிர்பால் மட்டுமில்லை: ஏனைப் புரு டர் பாலு மிவ்வாறிடை யெழுந்து வருத்தும் பல தீ வழக்கங்களைக் கடிந்தொதுக்க வேண்டியதவசியமே. ஆனால் நமது சமுதாயவுணர்ச்சி யறிந்து ஆக்கந்தரும் புதியன புகுத்தாது புகச்செய்து, தீயன பழைய வேனுந் தாமே கழிய வழிதேடுவதே அறமு மறிவுமாகும்.

சோமசுந்தர பாரதி.

---

ஒன்றாகக் காண்பதே காட்சி; புலன் ஐந்தும்
வென்றான் தன் வீரமே வீரம்.—என்றானும்
சாவாமற் கற்பதே கல்வி. தனைப் பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்.

---

ஈதல் அறம். தீவினைவிட் டீட்டல் பொருள். எஞ்ஞான்றும
காதல் இருவர் கருத்தொருமித்து—ஆதரவு
பட்டதே இன்பம். பரனை நினைந் திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

---

புண்ணியம் ஆம் : பாவம் போம் : போன நாட் செய்த அவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை, எச்சமயத்தோர் சொல்லும்
தீதொழிய நன்மை செயல். ஔவை.

# பால் உணவு.

(319—ம் பக்கத் தொடர்ச்சி)

(இதன் பதிப்புரிமை ஆசிரியரிடம்)

பால் பாத்திரங்களைச் செவ்வையாய் அலம்ப வேண்டுமென்று முன்னரே சொல்லியிருக்கின்றது; அப்படி அலம்பிலும் வியாதிக் கிருமிகள் மிகவும் பாலில் சேரக்கூடும்; சில சமயம் நீரில் கிருமிகளிருக்கின்றன; அவை முக்கியமாய் அதிசாரசுரம், வாந்திபேதி, குடலைப் பற்றிய மற்ற வியாதிகளுக்குக் காரணமான கிருமிகளாயிருக்கலாம். அவ்வித நீரைச் சுத்தங் கெட்ட நீரென்று சொல்லலாம். பால் பாத்திரங்களை அசுத்தமான நீரால் கழுவுதால் அவற்றுள் கிருமிகள் தங்குகின்றன; அக்கிருமிகளே பாலில் சேருகின்றன. பால் பாத்திரங்களை அலம்புவதற்கு உபயோகப்படும் நீர் கொதி நீராயிருக்குமாயின் அதனில் கிருமிகள் செத்துப் போயிருக்கும்; ஆகையால் எல்லாப்பாத்திரங்களையும் வென்னீரால் அலம்புவது அவசியமாகும். பாற்காரர்கள் தாங்கள் கறந்த பாலைத் தங்கள் வீட்டில் எந்த மூலையிலாவது சேர்த்து வைப்பார்கள். அந்த மூலையில் ஏதாகிலும் அழுகி நாற்றமெடுத்துக் கொண்டிருந் தாலு மிருக்கலாம், அதுவும் போதாக் குறைக்குப் பாலில் தண்ணீர் கலக்கின்றார்கள். அத் தண்ணீர் எந்தத் தண்ணீரானாலும் சரி, அதைக் கலந்துவிடுவார்கள். இப்படிக் கலக்குந்தண்ணீருக்குக் கசுமாலத் தண்ணீரென்று சொல்வது பல தரங்களில் பொருந்தும். இந்தியாவில் வைத்தியாப்பியாசஞ்செய்து அனுபவப்பட்டிருக்கும் எவரும், பாற்காரர்கள் பால் விடுவது மல்லாமல் நோய்களையும் அடிக்கடி கொண்டு வந்து விடுவார்களேன்று சாட்சி கூறுவார்கள்; இந்தப் பால் விற்பனை செய்வோர் கொண்டுவந்து கொடுக்கிற பாலில் தோஷ மொன்று மில்லையென்று நம்பி வாங்குவதினால் மிகச் சாதாரணமாய் உண்டாகுங் கேடு என்னவெனில், முக்கியமாய்க் குழந்தைகளுக்குக் கடூரமான வயிற்றுக்கழிவு உண்டாவதேயாம். பால் விற்போர் இவ்வாறு தண்ணீர் கலப்பது இவர்கள் பிறப்பிலேயே அமைந்த குணமாம். இக் குணத்தை மாற்றுவது நாயின் வால் கோணலை மாற்ற முயலுவது போலாகும். இவ்வாறு அமிர்தமாகிய பாலைக் குளிர்ந்த விஷமுள்ள பாலாக்கி விற்கும் அக்கிரமச் செய்கையை முனிசிபல் கவர்ன்மெண்டாரேனும் போலீசாரேனும் பார்த்து அவர்களைத்திருத்துவது தங்கள் கடமை யல்லவா? எல்லாக் குற்றங்களுக்கும், சட்டங்களும் தண்டனைகளும் ஏற்பட்டிருக்கும் போது இவ்வித அக்கிரம வியாபாரிகளுக்குச் சட்டங்களும் தண்டனைகளு மில்லாதிருப்பது விசனிக்கத் தக்கதேயாம்.

சென்னை-600 008
21344

# பால் உணவு

ஈக்கள் அடிக்கடி பால் பாத்திரங்களின் மேல் உட்காருந்திருப்பதையும் பாலில் வீழ்ந்திருப்பதையும் பார்த்திருக்கின்றோம். ஈக்கள் தங்கள், கால்களில் ஒட்டிக் கொண்டு கிருமிகளைக் கொண்டு போகின்றனவென்று முன்னரே வாசித்திருக்கிறீர்கள். ஒரு ஈயானது பாலில் சேருமானால் அது அப் பாலில் அநேகங் கிருமிகளை வைத்து விடுகின்றன. அக் கிருமிகள் பாலில் மிக்க விரைவாய் வளருகின்றன. ஆகையால், பாலில் ஈக்கள் சேராதபடி காத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். பால் விற்போரிடத்தில் இன்னொரு கெட்ட வாடிக்கையிருக்கின்றது; அஃதென்னெனின், பால் பாத்திரங்களுக்கு மூடி போடுவதே கிடையாது. பாற் காரனாகிலும் பாற் காரியாகிலும் தங்களுக்கு வாடிக்கை யான வீடுகளில் பால் கொடுக்கப் போகும் போது, பால் நிறைந்துள்ள பாத்திரங்களைத் திறந்தே கொண்டு போவார்கள். அவ்வாறு கொண்டு போவதால் கிருமிகளுந் தூசோடு கலந்து பாலில் சேருவதற்கு இட மாகின்றது; ஆதலால், பாற் காரர்கள் பால் பாத்திரங்களுக்கு மூடி போட்டிருந்தால் கிருமிகள் சேருவதற்கு இடமிராது.

பாலில் கிருமிகள் இன்னும் எவ்வாறு சேருகின்றன? நோய் கொண்ட பசுக்களினின்றுஞ் சேருகின்றன. மனிதர்கள் பல நோய்களால் துன்பப்படுகிறது போலவே பசுக்களும் அடைப்பான் (Anthrax) வாய் நோய் கால் நோய் (Foot and mouth disease)* பால்மடி நோய் (Manuisis) முதலிய பல நோய்களால் துன்பப்படுகின்றன. ஒரு பசு நோயாயிருக்கும் போது, அப்பசுவின் நோய்க்குக் காரணமான கிருமி அதன் பாலில் பெரும்பான்மையுமிருக்கும். க்ஷயரோக முடைய (Tuberculosis) பசுவின் பாலைக் குடிக்குங் குழந்தைகள் க்ஷய ரோகத்தால் துன்பப்படுகின்றன; ஆதலால், நோய் கொண்டிருக்கும் பசுவின் பாலை ஒருகாலும் உபயோகித்தல் கூடாது. எல்லாக் கறவைப் பசுக்களையும் கால் நாடை வைத்திய இன்ஸ்பெக்டர்களேனும் (Cattle disease Inspectors), சுகாதார இன்ஸ்பெக்டர்களேனும் (Sanitary Inspectors) பரிசோதித்து அவை எவ்வித நோயினாலுந் துன்பப்படாமல் சௌக்கிய மாயிருக்கின்றனவா வென்று அடிக்கடி பார்த்துச் சொல்லல் வேண்டும்.

ஏ. சோக்கலிங்கம் பிள்ளை,
4—4—25.

---

* இதனை வாய்க் கோமாரி காற் கோமாரி என்றுஞ் சொல்லுவதுண்டு.

# IV

## தமிழ் மொழி வளர்த்தல்.

பண்டித எஸ். முத்துசாமிப் பிள்ளை எழுதியது.

தமிழ் மொழி தற்காலத்துப் பாலிப்பாரும் படிப்பாருமின்றிச் சீர் குறைந்து வருதலை யுணர்ந்து வருந்துவாரும் அதனை வளர்க்க மார்க்கம் கூறுவாரும் தமிழகத்து ஆயிரக் கணக்காக உள்ளனர். அங்ஙனம் கூறுவோருள் நூற்றுக்கு ஒருவராவது, கூறும் அளவில் நூற்றிலொரு பங்கு, காரியாமிசத்தில் கவனம் செலுத்தத் துணிவரேல், அம்மம்ம! தமிழ்மொழி இந்நாளில் எத்துணைச் சிறப்புற்றிலங்கும்! நம்மவர்கள் வாய்ப்பேச்சுக் காரர்களே அன்றிக் கையாட்சிக் காரர்கள் அல்லர். நம்மவர்களின் பலதுறைப் பட்ட குறைபாடுகளுக் கெல்லாம் தலைக்காரணமும் இதுவே யாகும்.

தமிழ் மொழி வளர்த்தலைப் பற்றிப் பேசுவோர் பொதுவாகக் கூறும் வளர்ப்பு மார்க்கங்கள் கீழ்வருவன வாகும்.

(1) பண்டைக் காலத்துத் தமிழ் நூல்களை வெளியிடுதல்.

(2) ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் தமிழையும் கட்டாய பாடமாக வைத்தல்.

(3) சாஸ்திர சரித்திரச் சார்பான நூல்களை ஆங்கிலத்தினின்றும் மொழி பெயர்த்தல்.

(4) தமிழ் வித்துவான்களையும் தமிழ்நூல்களையும் ஆதரித்தல்.

(5) நூல் நிலையங்கள் சங்கங்கள் ஸ்தாபித்தல்.

(6) தமிழ்ப் பத்திரிகைகளை ஆதரித்தல் முதலியன.

இம்மார்க்கங்களைப் பற்றிப் பலர் பல சந்தர்ப்பங்களில் விரிவாகப் பிரசங்கித் தலையும் விஸ்தாரமாக எழுதுதலையும் சுமார் 30 ஆண்டுகளாக நான் நன்கு கவனித்து வருகிறேன். அவ்வண்ணம் பேசுவோரும் எழுதுவோரும் பேசும் காலத்தும் எழுதும் காலத்தும் மட்டும் இவ்விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கின்றனரே யன்றிப் பேச்சும் எழுத்தும் முடிந்ததோடு தம் கடமையையும் முற்றுப் பெற்ற தென்றெண்ணி, தாம் உணர்ந்த உண்மைகளைச் செயல் வழிகாட்ட முயலாது நின்று விடுகின்றனர்.

ஆகவே பேச்சு மார்க்கங்களை எட்ட நிறுத்திவிட்டு, எள்ளளவேனும் தமிழபிமான முடையோர் தமிழ்மொழி வளர்த்தலுக்காகப் பின்பற்ற வேண்டிய கிரியா மார்க்கங்களை என் அனுபவத்தில் எட்டிய மட்டும் ஈண்டு கூறத் தொடங்குகிறேன்.

**1. இல்ல நூல் நிலையங்கள்**:—திருவிளக்கைப் போல் நூல் நிலையங்களும் தமிழக இல்லங்களுக்கு இன்றியமையா ஸ்தாபனம் என்னும் உணர்ச்சி நம்மவர்கள் மனதில் நன்கு பதிய வேண்டும்.

# தமிழகத் தாருக்கு

தமிழ் பாஷையிலுள்ள நூல்களெல்லாம் ஒவ்வொரு இல்லங்களிலும இருக்க வேண்டுமென்பது என் கருத்தல்ல. ஒவ்வொரு வீட்டாரின் செல்வ நிலைக்கும் கல்விப்பயிற்சிக்கும் ஏற்றவாறு தமிழ் நூல்கள் ஒவ்வொரு தமிழக இல்லத்தும் இருத்தல் வேண்டும். சாமானிய மாக எழுதப்படிக்கத் தெரிந்த ஒரு வியாபாரி அல்லது விவசாயியின் வீட்டில் (1) ஒளவையார் பாடல்கள் (2) நீதி நெறி விளக்கம், நன்னெறி நாலடியாராதிய நீதி நூல்கள், (3) தமிழ் வேதமாகிய திருக்குறள் (4) தேவாரம் திருவாசகம் ஆதிய பக்தி நூல்கள் (5) மாதவய்யா நாவல்கள், சிறு கதைகள் (6) தேச பக்தி புகட்டும் பாரதி பாடல்கள் (7) தேச பக்தர்கள் ஜீவிய சரித்திரங்கள் (8) தேச சரித்திர நூல்கள் (9) சுகாதார நூல்கள் முதலியன கட்டாயம் இருத்தல் வேண்டும். மாதம் ஒவ்வொரு நூல் வீதம் வாங்கினால் எவ்வளவு எளிய நிலைமையிலுள்ளவர்களுக்கும் தம் வாழ் நாளில் ஒரு சிறிய நூல் நிலையம் தம் வீட்டில் ஸ்தாபிக்க முடியும். இவ்வாறு சேர்க்கப்படும் நூல் நிலையங்கள் பரம்பரைச் சொத்தாகவும் பாதுகாக்கப் படல் வேண்டும். மேனாடுகளில் வீடுகள் தோறும் நூல் நிலையங்களு மிருக்கும். கிறிஸ்தவ வேதமாகிய பைபிள், ராபின்ஸன் குரூஸோ, கல்விவர் யாத்திரைகள் பல விநோதக் கதைகள் முதலிய நூல்கள் இல்லாத குடிசைகள் கூட மேனாட்டில் காணப்படா.

ஆகஸ்போர்ட் சர்வகலா சங்கத்துக்குக் கல்வி பயிற்சிக்காகச் சென்றிருந்த என் நண்பரொருவர் ஆங்கிலேயரின் கிராம வாழ்க்கையை நேரிற் பார்த்தறியும் பொருட்டு, ஒரு ஆங்கிலேய நண்பருடன் ஒரு கிராமத்துக்குச் சென்று ஒரு உழவன் வீட்டை யடைந்தாராம். அவ்வீடு மூன்றறை மட்டும் உள்ள ஒரு சிறுகுடிசை. முதல் அறை நண்பர்களை வரவேற்கும் அறையாம். அவ்வறைச் சுவரில் ஒரு புஸ்தகத் தட்டு (Book-shelf) மாட்டப்பட் டிருந்ததாம். அதில் வெகு நாட் பழக்கமுடைய 100 புஸ்தகங்களுக்கு மேல் இருந்தனவாம். எனது நண்பர் அப்புத்தகங்களைப் பற்றி உழவனிடம் வார்த்தையாடத் தொடங்கிய பொழுது, அந்நூல்கள் அவனது முப்பாட்டனார் கால முதல் ஒவ்வொன்றாகச் சேர்க்கப் பட்டவை யென்று மிகப் பெருமிதத்தோடும் மகிழ்ச்சியோடும் உழவன் மொழிந்தானாம். இது ஒரு ஆங்கில உழவன் வீட்டுக் காட்சி.

இனி நான் கண்ட ஒரு தமிழ் நாட்டுப் பிரபுவீட்டுக் காட்சியைக் கூறுகிறேன்.

ஐந்து வருஷங்களுக்கு முன், திருநெல்வேலியில் மாதம் 300 ரூபாவுக்குமேல் வருமானமுடைய ஒரு நண்பர் வீட்டில் சென்றேன். நண்பர் என்னை மிக அன்புடன் வரவேற்று அவ்வீட்டில் ஓர் அறையில் தொங்க விட்டிருந்த ரவிவர்மா படங்களையும், தேசபத்தர் படங்களையும் விநோதமான பிரஞ்சுப் புகைச் சித்திரப் படங்களையும் மிக மகிழ்ச்சியோடு காட்டினார். அப்படங்களைக்கண்டு ஆனந்தங் கொண்டபின் தங்கள் நூல் நிலைய மெங்கே யென்று நண்பரைக் கேட்டேன். உடனே நண் பரின் முகம் வெளுத்துப் போயிற்று.

மேலும் கீழும் பார்க்கத் தொடங்கினர். நண்பரோ தமிழில் ஒருவாறு தேர்ச்சியடைந்த படிப்பாளி. பொதுக் கூட்டங்களிலும் சொற் பொழிவு நிகழ்த்துவார். பத்திரிகைகளுக்கு விஷயங்களும் எழுதுவார். ஆனால் அவர் வீட்டில் வெகு சிரமப்பட்டு நான் கண்ட நூல்கள் (1) பார்ஸி சதாரம் சரித்திரம் (2) பவளக்கொடி மாலை (3) தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி (4) கோமளம் குமரியானது (5) மணிசங்கர் கோவிந்த ஜி தமிழ் கியாட்லாக் (6) ஆதியிலும் அந்தத்திலும் பப் பத்துப் பக்கமில்லாத கமலாம்பாள் கதை (7) கதைக்கொத்து மலர் IV (இது அவர் மகன் புத்தகம்) ஆகியவைகளே.

"ஐயா ! தாங்கள் தமிழபி மானி யாயிற்றே. தங்கள் வீட்டில் தமிழ் நூல்கள் சிலவேனும் இல்லாதிருக்கலாமா"? எனக்கேட்டதற்கு "நூல்கள் தேவைப் படும்போது ஹிந்துக்கலா சாலை லைபரரியி லிருந்து எடுத்து வாசிப்பேன்" எனக் கூறினர் எனது நண்பர்.

நம்மவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர்களும் எனது நண்பரைப் போன்றவர்களே. தமிழ் நூல்கள் நூல் நிலையங்களுக் கேற்ற காட்சிப் பொருள்கள் என்றே பொதுவாக மதிக்கப் படுகின்றன. இவ்வுணர்ச்சி தமிழர் மனதை விட்டு நீங்க வேண்டும். ஒவ்வொரு தமிழனும் தன் வீட்டில் ஓர் நூல் நிலயம் ஸ்தாபித்தலைத் தான் நீங்காக் கடமையாகக் கொள்ளல் வேண்டும். ஆனால் "பணம் வேண்டாமா?" என்று சிலர் சாக்குப் போக்குச் சொல்லக் கூடும்.

ஐயா ! ஹோட்டல் காபி, சீமைக் காபி, ஸோடா, லெமினேட் வெற்றிலைப் பாக்கு, புகையிலை, பொடி, டிராமா, ஸர்கஸ், சினிமா, மஸ்லீன் சொக்காய், பவுண்டன் பேனா, ரிஸ்டு வாச்சு முதலிய பல இழவுகளுக்கும் பணம் எங்கிருந்து வருகிறது ? புஸ்தகங்களுக்கு மட் டுமா பணத்தட்டு ?

வீண் செலவுகளுக்கு நாடோறும் செலவு செய்யும் பணத்தில் ஒரு சிறு பகுதியைத் தமிழ் நூல்கள் வாங்க ஒவ்வொரு தமிழனும் நீக்கிவைப்பனாயின் தமிழக இல்லங்கள் தோறும் நூல் நிலயங்களைக் கண்டு களிக்க வழி யேற்படுமே.

தமிழகத்து ஒருகோடியே எண்பது லக்ஷம் தமிழர்கள் வசிக் கின்றனர். ஆனால் தமிழகத்து வெளியாகும் எத்தகைய உயர்ந்த நூலும் ஒரு பதிப்புக்கு ஆயிரம் பிரதிக்குமேல் அச்சடிக்கப்படுவ தில்லை.

அந்தோ ! ஒவ்வொரு தமிழனும் நூல் வேட்கையுடையவன் ஆனால் ஆண்டாண்டு தோறும் ஆயிரக்கணக்கான புது நூல்கள் தோன்றுமே. தமிழ்த்தாயின் நூல் பஞ்சம் நீங்குமே. தமிழ் நூலாசிரியர்களுக்கும் நல்ல பிழைப்புண்டாகுமே.

மற்றும், கலியாண காலங்களில் பெண் வீட்டார் மணமகனுக்கு வரிசைகள் வழங்குவதும், பெண்ணுக்கு ஸ்திரீதனம் கொடுப்பதும் தமிழ் நாட்டு நடப்பு. இப்பொழுது பொன்னாபரணங்களும், பட்டா

டைகளும், தங்க வெள்ளிப்பாத்திரங்களும், மோட்டார், சைக்கில்களும், பொதுப்பட மாப்பிள்ளை வரிசையாகவும் சீதனமாகவும் வழங்கப்படுகின்றன. தமிழ் நாட்டுப் பெற்றோர் தமிழ் நூல்களையும் வரிசை சீதனப் பொருள்களாக வழங்க முன் வரவேண்டும். கலியாண ஒப்பந்தம் நடை பெறும் காலத்து, "நகை யெவ்வளவு? சீதன மெவ்வளவு?" எனக்கேட்கும் பிள்ளை வீட்டார், "தமிழ் நூல்கள் எத்தனை?" என்று கூடக்கேட்டு விவாக ஒப்பந்தம் முடிவு செய்ய வேண்டும்.

பிறந்த நாட் காலங்களில் மக்களுக்குத் தமிழ் நூல்கள் பரிசளிக்கும் வழக்கைப் பெற்றோர் கைக்கொள்ளுதலும் நன்றாம்.

II. சிறந்த காலட்சேபம்.—சிறந்த காலட்சேபத்தைத் தமிழ் மக்கள் பொழுதுபோக்கு மார்க்கமாகப் பின் பற்ற வேண்டும். நம்மவர்களுக்குள் நூல் வாசிக்கும் வழக்க முடையோர் மிகச் சொற்பம். சீட்டாடி தாயமிட்டு, சூதாடி, நேரம்போக்கினாலும் நம்மவர்கள் நூல்களைத் தீண்ட மனம் கொள்வதில்லை. இவ்வண்ணம் வீண் காலம் போக்குவோர் "வாசிக்க நேரமில்லையே" யென்று வருந்துவதும் உண்டு.

இராஜப்பிரதிநிதியும் மாகாணக் கவர்ணர்களுங் கூட ஒன்றிரண்டு மணி நேரம் முறையாக நூல்களைப் படிக்கவும் பத்திரிகைகள் வாசிக்கவும் பொழுது காண்கின்றனர். காலஞ் சென்ற போப்பையர், எவ்வளவோ நெருக்கடியான வேலைகளுக்கிடையிலும், தமிழ் கற்கவும் தமிழ் நூல்கள் எழுதவும் சமயம் கண்டார். பல பொறுப்புடைய அரசாங்க உத்தியோகங்கள் வகித்த ரோமேச சந்திர தத்தரும் பல சரித்திர ஆராய்ச்சிகள் செய்து அநேக உயரிய நூல்களும் எழுதினார்.

தெருத்திண்ணைகளிலும் சந்தி மடங்களிலும் தூங்கித் தூங்கிக் காலம் கொள்ளும் நமது தமிழகச் சகோதரர்களுக்குத் தான் வாசிக்க நேரமில்லை போலும்!

சிலர் ஊரார் போற்றவும், பெருமைக்காகவும் நூல்களை வாங்கி அலமாரியில் அணியணியாக வைத்து அழகு பார்க்கின்றனர். இவர்களின் நூலபிமானத்தால் ஒரு நன்மையும் விளையப் போவதில்லை, அலமாரிக்குத் தான் பாரம்.

வீட்டுத்தலைவர்கள் பிள்ளைகளுக்கு வாசிப்பில் சுவையுண்டாக்க முயல வேண்டும். ஓய்வு நாட்களில் குடும்பத்தார் சூழ்ந்திருக்க, நூல்களிலுள்ள ரஸமான பாகங்களைப் பெற்றோர் வாசித்துப் பொருள் விளக்கி மகிழ் வடைந்தால் வீட்டாருக்கு வாசிப்பிலே ஆசை மிகும். மேனாட்டு இல்லங்களில் பெற்றோரும் மக்களும் குழுமியிருந்து சிறந்த காலட்சேபம் செய்து மகிழ்வது ஸர்வ சாதாரணமான காட்சி. தமிழ் நாட்டிலோ தந்தையிருக்கு மிடத்தில் மகன் தலை காட்டான். அண்ணன் முன்னிலையில் தங்கை வாய்திறவாள்;

இவை மரியாதைக் குறிகளாம். அப்பப்ப! மரியாதையைப் பற்றிய நம்மவர் கொள்கை வெகு விநோதமே!

தற்காலத்துத், தமிழகத்திலே பெண் கல்வி நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்தே வருகின்றது.

பட்டினங்களிலுள்ள பெண்களெல்லாம் அநேகமாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் கல்வி கற்ற பெண்கள் காலம் போக்கும் முறைதான் வெகு விசித்திரம். புருஷன் தன்வயிற்றுப் பிழைப்புக்காக வெளிச்சென்றால் பெண்கள் சங்கங்கூடி வம்பளப்பது நமது இல்லங்களில் பிரதி தினமும் நடைபெறும் கண் காட்சியாகும். இவ்வண்ணம் வம்பளப்பதை விட்டுத் தமிழகப்பெண் கள் சிறந்த காலட்சேபம் செய்யத்தொடங்கினால் தமிழகத்துள்ள சிறுவர் சிறுமியரெல்லாம் விவேகிகளாக வளர்வர். கல்விப்பயிர்சி யில் தேர்ச்சி பெற்ற அப்பெண்கள் வயிற்றில் தோன்றும் குழந்தை களும் ஞானக் கொழுந்துகளாக வளரும். தமிழகத்து அப்பொன் னாள் வரும் நாள் எந்நாளோ?

III. பத்திரிகை வாசித்தல் — நூல்கள் வாசித்தலைப்போலவே பத்திரிகை வாசித்தலும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாத தாகும். பத்திரிகைகள் வெறும் தாள் மட்டுமல்ல; அறிஞர்க ளின் ஹிருதய கமலத்தரும்பிய தேன்துளிகளைத் தாங்கிவரும் பொற் கிண்ணங்களாகும், ஒவ்வொரு தமிழனும் குறைந்த பட்சம் ஒருமாதப் பத்திரிகையும் ஒரு தினப் பத்திரிகையுமாவது வாங்கிப்படிக்கவேண் டும்: மேனாட்டாரின் உயர்ச்சிக்கு அவர்களின் பத்திரிகைப்பற்றே மூல காரண மாகும். மேனாட்டுப் பத்திரிகைகள் லட்சக்கணக்கான சந்தாதார்களை உடைத்தாயிருக்கின்றன. அமேரிக்காவிலே ஆயிரம் வீட்டுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் தினப்பத்திரிகைகளும் வாரப்பத் திரிகைகளும் உலாவுகின்றனவாம்; அநாகரீக மக்களாய்க் கருதப்படும் நீகிரோவர்களுக்காக வெளியிடப்படும் 'கிறைஸிஸ்' என்னும் பத்திரி கைக்கு 50 ஆயிரம் சந்தாதார்கள் இருக்கிறார்களாம். தமிழ் நாட்டி லே 5000 சந்தாதார்களையுடைய தினசரிப் பத்திரிகைகளைப் பார்ப் பது அபூர்வக்காட்சியாக இருக்கின்றது.

தமிழ் மொழி வளர்ச்சிக்குரிய மார்க்கங்களில் (1) இல்ல நூல் நிலையம் (2) சிறந்த காலட் சேபம் (3) பத்திரிகை வாசித்தல் ஆகிய மூன்றையுமே நான் வற்புறுத்திக் கூறுகிறேன்.

இம் மூன்று நோக்கங்களும் கூடுமாயின் மற்றவை தானே போதரும். நூல் நிலையங்கள் மல்கி, நூல் வாசிப்போர் தொகை பெருகும் போது நூலாசிரியர் தொகையும் மிகும். புது நூல்களும் ஆயிரக்கணக்காக வெளிவரா நிற்கும். தமிழ் மொழியும் சிறப்படை யும். தமிழரும் மேனிலை யெய்துவர். தமிழகமும் சீர் பெற்று வாழும்.



லார்ட் ராலின்ஸன் அவர்கள்.

ஊஸ்மான் சாஹிப் அவர்கள்.

## உண்மை தவரு உத்தமன்

ஒரு தாயானவள் திரவியம் தேடப் புறப்பட்ட தன் பையனுன அப்துல் காதர் என்பவனைக் கூப்பிட்டு, அப்பா உனக்குத் தெய்வமே துணை, இதோ என் கையிலிருக்கிற நாற்பது வெள்ளி முகாரக்களை எடுத்துக் கொள். நீ போகிற காரியம் சித்தி பெற ஆண்டவன் அருள்புரிவார். நானே கிழவி—உன்னை இனிச் சந்திக்க முடியாம லிருக்கலாம். எனக்கு ஒரு பிரதிக்கினை மட்டும் செய்து கொடு, அதாவது "ஒரு நாளும் பொய் சொல்லாம லிரு" என்ருள். அப்படியே பையனும், தாயின் வார்த்தையைத் தெய்வ வாக்காக மதித்து வாக்குத்தத்தம் செய்து கொடுத்து விட்டுப் பயண மானுன்.

அரேபியாவில் வழிப் பறிக் கொள்ளைக்காரர்களின் அட்டூழியம், இருபதாம் நூற்ருண்டிலேயே நிற்க வில்லை யானுல், ஐநூறு வருடர்த்திற்கு முன் சொல்லவும் வேண்டுமோ? நமது அப்துல் காதரைத் திருடர் வழி மறித்துக் கொண்டார்கள்.

அதில் ஒருவன் பையா, உன்னிடம் இருப்பு என்ன? என்ருன். பையன், உடனே, என் உள் சட்டைப் பைக்குள் நாற்பது வெள்ளி முகாராக்கள் வைத்திருக்கிறேன் என்று உண்மையைப் பகன்ருன். எனினும் திருடர்களுக் குள்ள சுபாவ புத்தியானது இவன் பேச்சு நகைப்பை உண்டுபண்ணியது. மற்ருெரு திருடன் மகா கோபமாய் உன்னிட மிருக்கும் பணமென்ன? உண்மையைச் சொல்லென்று அதட்டிக் கேட்டான். நமது அப்துல் காதரும் முன் சொன்னதைத் திரும்பவும் சொல்லலுற்ருன். அவன் வார்த்தை திருடர்களுக்கு நம்பிக்கை கொடுக்கவில்லை.

தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்த கள்வர்தலைவன் பையா, இங்குவா! உன்னிட மிருப்பதை ஒளியாமல் சொல்லிவிடு. என்ருன். பையன் "உன்னுடைய ஆள்கள் வசம் சொல்லியதைத் திரும்பவும் சொல்லுகிறேன். ஏனே! நீங்கள் நான் சொல்லு வதை நம்புகிறதில்லை" யென்ருன்.

கள்வர்தலைவன், கண்களில் நெருப்புப் பொறி பறக்க, மீசை துடிக்க,கோபாக்கினியாய், இந்தப் பையன் சட்டைகளைப் பரிசோதித்துப்பாருங்க ளென்ருன். அவன் சொன்ன பணமே இருந்தது. திருடர் தலைவன் ஆச்சரியப் பட்டான். இதுவரை இம்மாதிரி ஒருவரும் சொன்னதில்லை, ஏன் உண்மையைச் சொன்னுய் அப்பா? என்ருன். என் அருமை அன்னையின் வேண்டு கோளுக் கிணங்கியே சொன்னேன் என்ருன் அப்துல் காதர்.

கள்வர் தலைவன், பையா! நீ இள வயதினனு யிருந்தும் உன் தாயின் கடமையை நிறை வேற்றினுய். நானே வயதில் முதிர்ந்த மூடன், கடவுளுக்குச் செய்ய வேண்டிய கடமையை மறந்திருக்கிறேன். உடனே பையன் கையை முத்தி முன் செய்த தீய கர்மத்திற்கு வருந்தினுன். அப்படியே, அவன் சகாக்களும் செய்தார்கள். சத்தியம் எப்பொழுதும் முன் நிற்பது பொய்யோ? வயதில் சிறியவனுனுலும், உண்மையானது முதிர்ந்த வயதானவனின் மூளையையும் கலக்கி அவனைச் சீர் திருத்தி விட்ட தல்லவா?

———

# கைத்திறன்.

ஸ்ரீமான் எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை யவர்கள் பாடியது.

வெயில் வரினும் மழைவரினும் விரிகுடையாம் கையே!
வியர்வை வரின ஆற்றுசிறு விசிறியதாம் கையே!
துயிலவொரு மகவைத்தொட்டி லிட்டசைக்கும் கையே!
துரித்முடன் எழுத வொரு தூவிகொளும் கையே! (1)

இனிய செங்நெற் புலமுழுதற் கேர்பிடிக்கும் கையே!
இன்னிசைகள் எழுப்ப வீணை யேந்து மெழிற் கையே!
கனியுதிர்ப்பக் கல்லெறியும் கவண்பிடிக்கும் கையே!
கண்களிப்பப் படமெழுதிக் காட்டுமென் றன் கையே! (2)

தானதர்மம் செய்பவெதும் தளர்விலதாம் கையே!
தளர்பவரைக் கண்டுதலை தாங்க எழும் கையே!
பானம் செய்தற் கேற்றவொரு பாத்திரமாம் கையே!
பையரவைப் போல வந்து பயமுறுத்தும் கையே! (3)

மலரெடுத்து நல்லசெண்டு மாலைகட்டும் கையே!
வாய்க்கினிய பண்டமெலாம் வைத்துதவும் கையே!
ஜலத்திலோடம் விடுவதற்குச் சலிப்பிலதாம் கையே!
தரையில் மோட்டார் ரயில்நடத்தச் சமர்த்துளதாம் கையே!

கோபுரஞ்சேர் கோவிலொடு குடிசை கட்டும் கையே!
கூபதடா கங்களெலாம் குழித்துதவும் கையே!
ஆபரணம் பசுமணிகள் ஆய்ந்து செய்யும் கையே!
ஆடைகள்பா வாடைகளும் ஆக்குமெழிற் கையே! (5)

மல்லயுத்தம் செய்வதற்கு வந்துநிற்கும் கையே!
வாள்பிடித்து வகை வகைபாய் மரமறுக்கும் கையே!
நெல்லைக்குத்தும் அரிசி தீட்டும் நொய்கொழிக்கும் கையே!
நேயரொடு பந்தடியாடி நிதம் ஜெயிக்கும் கையே! (6)

நாடியசீர் நா டடைய ராட் டுருட்டும் கையே!
நல்லகதர் நெய்யமிகு வல்லமை கொள் கையே!
பாடிய வாய் தேனூறும் பாரதியார் பாடல்
பாடுதற்குப் பண்ணமைந்த பாணிகொட்டும் கையே! (7)

அழைப்பதற்கும் அகற்றுதற்கும் அபிநயிக்கும் கையே!
ஆக்குதற்கும் அழிப்பதற்கும் ஆற்றல் பெறுங் கையே!
உழைப்பதற்கும் ஊட்டுதற்கும் ஊக்கமுறும் கையே!
உதவுதற்கும் ஏற்பதற்கும் உரிமைகொளும் கையே! (8)

மக்களைத்தம் ஒக்கல்வைத்து வளர்த்திடுமென் கையே!
வர்ணமலர் தலைக்கணிந்து வாசமூட்டும் கையே!
தக்கபெரி யோர்க்கு சலாம் தானளிக்கும் கையே!
தாணியிலுன் திறமையெலாம் சாற்றலெளி தலவே! (9)

---

ஜாதியை ஒழிமின், தீண்டாச் சாபத்தை அழிமின், தக்க
நீதியைக் கொள்மின், வேத நெறிவழி பற்றிச் செல்மின்,
ஆதரம் பெருகச் செய்மின், அன்பினை வளர்மின், நாளும்
கோதறும் உலகுக் கெல்லாம் குருநிலை கொண்டு வாழ்மின். (1)

கோவிலைத் திறமின், உங்கள் குலப்பெருங் குழுவை யெல்லாம்
ஆவலின் உட் சென் றந்த அண்ட பிண் டங்கள் ஈன்ற
தேவனைப் பணியச் செய்மின்; செய்கடன் மறந்த, தீய
பாவ மன்னிப்பை வேண்டிப் பரமனைத் தொழு மின் நாளும். (2)

அடிமையை நோக்கி, நாட்டின் அழிவினை நோக்கி, நங்கள்
மடமையை நோக்கி, வாழ்வின் வறுமையை நோக்கி, மாளா
உடைமையைச் சுதந்திரத்தை, உயர்கலை யறிவைக் காப்பான்
கடமையைப் புரிய வாரீர் கடற்புவி யென்றும் உய்த்த. (3)

குற்றமே குறித்தல் நீக்கிக், கொடுமொழி அகற்றி, நன்கு
கற்றறிந் துரைகள் போக்கிக் காலமும் இடமும் நோக்கிப்
பெற்றிகொள் அன்பைத் தேக்கிப் பேரரு ளாசீத் தாயின்
வெற்றியா ராசி வீக்கி விடுதலை பெறுமின் இன்றே! (4)

ஆதி.

# சித்திரப் பத்தி

(1) தொழிலாளனின் மனைவி கொஞ்சம் அரிசியைப் பெரிய பானை ஜலத்தில் போட்டுக் கஞ்சி காய்ச்சுகிறாள்.

(2) அப்படிக் காய்ச்சின கஞ்சியையும், தனக்கு வைக்காமல், வேலை செய்யப் போகும் புருஷனுக்கு வார்த்து விட்டுப் பசிக் கொடுமையால் சோர்ந்து படுத்துக் கொள்ளுகிறாள். புருஷனும் வேலைக்குப் போகிறான்.

(3) தொழிலாளி—துரையே, சம்பளம் போதாது. கால் வயிற்றுக்குக் கூடக் கஞ்சி அகப்பட வில்லை. சம்பளத்தைக் கூட்டவேண்டும்.

துரை:—சபாஷ்! என்ன சொல்லரே! அரே மியான்...கால் வயிற்றுக் கஞ்சி டிரின்க் செய்தால் 100 வருஷம் ஜீவித்திருக்கலாமே. அதிகப்படுத்தினால் எனக்கு லாபம் குறைந்துவிடும். போ!

(4) பசி தெரியாமலிருக்கக் கிடைத்த காசுக்குக் கள்ளை அருந்தி விட்டு, தள்ளாடிக் கொண்டு போகிறான்.

(5) இவனது காசை எதிர் பார்த்துக் கொண்டிருந்த வீட்டிலுள்ளோர்களுக்கு வெறுங் கையைக் காட்டுகிருன்.

(6) மார்வாடியும், கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்கிருன். அவன் பாஷையில் திட்டவும் செய்கிருன்! பாவம்! இது, தான் தொழிலாளரின் நிலைமை.

# யசோதரன்.

## அத்தியாயம்—I.

### சண்டமாரி தேவி பூஜை.

பூமடந்தையும் நாமடந்தையும் பொருந்திப் புகழ்விரிந்த நமது பரத கண்டத்திலே ஔதயம் என்னும் நாடு ஒன்று உண்டு. அது வற்றாத நீர்ப் பெருக்கினையுடைய மா நதிகளையும், மேகம் அளாவிய சோலைகளையும், ஆழ்ந்து அகன்ற ஏரிகளையும் குளங்களையும், சமபூமிகளாகவுள்ள வளம் பொருந்திய வயல்களையும் பெற்றது. வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோலுயரும் என்றபடி அந்நாட்டில் எல்லாம் முறையாக இருந்தன.

அத்தகைய வளம் பொருந்திய நாட்டிற்கு இராஜமாபுரம் என்னும் நகரம் இராஜதானியா யிருந்தது. அந்நகரம் அழகில் அளகாபுரியையும் போகத்தில் பொன்னுலகையும் ஒத்திருந்தது. நகர மாந்தர்கள் சங்கநிதி பதுமநிதி யென்ன மாதனங்களைப் படைத்திருந்தனர். அந்நகரத்தை அரசிருக்கையாகக் கொண்டு மாரிதத்தன் எனும் மன்னன் அந்நாட்டை ஆண்டுவந்தான். அந்நாட்டுக் குடிமக்களும் முடி மன்னனும் தாம் பெற்றிருந்த செல்வ மயக்கினால் முத்தியென்பதொன்று உண்டெபதையே மறந்து உண்டு உடுத்துச் சுகித்தலையே பேரின்ப மெனக் கொண்டு வாழ்ந்தனர். பிறவிப்பிணி போக்கும் பெருந்தவத்தைக் கைக்கொண்டிலர் ; அற மார்க்கத்தை அறிந்திலர் ; பெரியோரைப் பணிந்திலர் ; களி விளையாட்டிலே காலங்கடத்தினர் , கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐப்புலன்களாலும் நுகரப் படும் இன்பமே பெரிதெனப் பற்றி ஒழுகினர்.

இங்ஙனம் அவர்கள் வாழு நாளிலே மக்கட்கு மிக்க இதத்தைத் தரும் இளவேனிற் பருவம் வந்தது. அப்பருவத்தில் இளமரங்கள் நிறைந்தசோலைகளிலெல்லாம் தங்களை ஆட்கொள்ளும் வசந்தகால வேந்தனுக்குச் சிறப்புச் செய்வன்போலக் கோங்கமரங்கள் அலர்ந்து பொற்குடை கவித்தன ; வாகை தருக்கள் சாமரை வீசின ; குயிற் கூட்டங்கள் பல்லியம் முழக்கின ; வண்டினங்கள் ரீங்காரஞ் செய்து பாடின ; மல்லிகை முல்லை மாலதி முதலிய மலர்ச்செடிகள் நாட்டிய மாடுங்கணிகையரைப் போல அசைந்தாடி நாட்டியஞ்செய்தன ; மா, அசோகு முதலிய மரங்களாம் புருடர்கள் புளகாங்கித முடையவர் போல இளந்தளிர்களால் நிறைந்து அலங்காரத்துடன் நின்று வசந்தனை நல்வர வேற்றன.

இவ்வாறாக வசந்தகாலம் வந்தமை யறிந்த அரசன் வசந்த மாடுதற்கெண்ணி நகர்ப் புறத்தேயுள்ள தொரு நந்தவனத்திற்குச் சென்றான். அவனுடனே அரச மகளிரும், நகரவாசிகளும் சென்றனர். சென்றவர்கள் செய்குன்றங்களிலும், செந்தாமரை நிறைந்த வாவிகளி

லும், பூஞ்சோலைகளிலும், மணல் வெளிகளிலும், மனோகர மண்டபங் களிலும் பொருந்தி விளையாடிக் களித்தனர்.

அப்பொழுது நகர மாந்தரிற் பலர் ஒன்றுகூடி வந்து அரசனைக் கண்டு, "அரசே! நாமெல்லோரும் வசந்தக் களிவிளையாட்டிலாழ்ந்து, வழக்கமாக இப்பருவத்தில் நம் நகரம் காக்கும் சண்டமாரி தேவிக்குப் பூஜை போடுவதை மறந்தோம். இது மிக்க பிழை. இதற்காகத் தேவி சிற்றங்கொண்டால் நமக்குப் பிணிகள் பல வந்து பற்றும்; அணியணியாய் உயிர்கள் நாசமாய்ப் போம்; மாரி வளங்குன்றும்; மற்றும் பிற இன்னல்களும் சேரும். ஆதலின், நாம் இன்னே அத் தேவிக்குச் சிறப்பியற்றப் புறப்படல் வேண்டும்" என்றனர். அரசன் ஜெயின தருமத்திலே சொல்லும் ஜீவகாருண்யத்தில் தெளிவில்லாத வன்; தேவதைகளுக்கு உயிர்ப் பலிகொடுத்துச் செய்யும் பூஜை கொலைக்கிடனாகிக் கோரநரகத்திற்குள்ளாக்குமென்பதை உணராதவன்; அங்ஙனம் இயற்றுவதே நற்கருமமெனக் கொண்டவன். ஆதலால் அவனும், "தேவிக்குச் சிறப்பு இன்னே எடுப்போம்" என்று கூறி அம்மக்களது விருப்பிற்கு இசைந்தனன். உடனே யாவரும் சண்டமாரி தேவியின் கோயிலை நோக்கிச் சென்றனர்.

அரசன், அறிவான்ற கேள்வியும் நல்லறிவும் இல்லாப் பேதை மக்கள் வணங்குவதும், கோபமும் பாபமும் ஓர் உருக்கொண்டதென் னும்படி விளங்குவதுமான சண்டமாரி யென்னும் தீத்தேவதையின் படிவ மிருக்கும் கோயிலை அடைந்தனன். அடைந்தவன் ஆலயத்தை வலம் வந்து, "சர்வ வல்லபமுடைய தேவியே! எங்களது துன்பம் போக்கி எங்களை இனிது ஆட்கொள்ளுவாய்" என வேண்டித் தேவியின் அடிமிசை விழுந்தனன். அவனது குடி மக்களும் அங்ஙன மே கூறித் தொழுதனர்.

அதன் பின்னர், அரசன் தனது பிரஜைகளைப் பார்த்து "குடிகளே! தேவி பூஜைக்காகப் பல்லுயிர்களைக் கொண்டு வாருங் கள்" என்று கட்டளை யிட்டான். நகர மாந்தர்கள் அரசன் கட்டளைப் படியே மயில், கோழி, பன்றி, ஆடு, எருமை முதலிய பிராணி வருக்கங்களில் பலவற்றை இரட்டை இரட்டையாகப் பிணித்துக் கொண்டு வந்து நிறுத்தி தேவி பூஜைக்கு ஆயத்தமாய் நின்றனர். அப்பொழுது அரசன் அவர்களை நோக்கி, "நற்குடிகாள்! எனது வெற்றி வாளினால் தேவிக்கு மக்களிருவரைப் பலி கொடுக்கக் கருதி யுள்ளேன், பிணைத்துக் கொணர்ந்திருக்கும் உயிர்களை நீங்கள் முதலில் பலி கொடுத்துப் பூஜை செய்யுங்கள். பின்பு நான் கருதியவாறு நரபலி கொடுத்துச் சிறப்பியற்றுவேன்" என்றான். அவர்கள் அவ் வாறே செய்யத் தலைப்பட்டனர்.

அப்பொழுதே அரசன் சண்டகருமன் எனும் சேனைத்தலைவனை அழைத்து, "அங்க இலக்கணங்கள் நன்கமைந்த மனித தம்பதி களைத் தேவிப் பலிக்காகக்கொண்டு வருக" வெனக் கட்டளை யிட்ட

னன். அவன் அக்கணமே அக நகர்க்குள் பிரவேசித்து அவ்வகைத் தம்பதிகளைத் தேடலாயினன்.

அது காலை சுதத்தாசிரியர் எனும் பெயரிய பெரியார் ஒருவர் ஐந் நூறு அருந்தவர்களுடனும், நல்லொழுக்கம்! பூண்ட * சிராவகர்களுடனும் தீர்த்தவந்தனை செய்து வருபவர்!அந்நகர்ப் புறத்தே யுள்ள தொரு சோலையில் வந்து தங்கினர். தங்கியவர் யாத்திரை செய்து வரும் வழிகளிலே தம்மவர்க்கு அறியாமல் நேர்ந்த தோஷங்களைப் பிராயச்சித்த முதலிய கருமானுஷ்டடங்களால் போக்கிப் பரிசுத்த ராய்த் தன் பரிவாரங்கள் சூழ ஆசன மொன்றில் வீற்றிருந்தார். அப் பொழுது குழுவினர்கள் அவ்வாசாரியரைத் தொழுது, "இன்று நாங்கள் உண்ணு நோன்பினை மேற் கொள்ளுகின்ரும்" என்று கூறி உபவாச விரதத்தைக் கொண்டனர். அவர்களுள்ளே இளம் பிறை போன்று வளரும் பருவத்தரான அபய ருசியும், அவன் தங்கை அபய மதியும் ஆசாரியர் முன் வந்து வணங்கி அசைவின்றி நின்றனர். ஆசாரி யர் அவர்களுக்கு ஆசி கூறி அவர்களைப் பார்த்து, "நீங்கள் வழி நடப் பிஞல் மிக்க இளைத்திருக்கின்றீர்கள். மேலும் நீவிர் இருவரும் இளையர். எங்களைப்போல இன்று உபவாச மிருக்க உங்களாலாகாது. இன்னே நீங்கள் இந்நகர் சென்று உணவருந்தி மீண்டு எங்களை வந்து அடையுங்கள்" என்று கூறி நகர் செல்ல அவர்களுக்கு விடை கொடுத்தனர். அவர்கள் "அங்ஙனமே செய்கின்ரே"மென்று கூறி ஆசாரியரையும் குழாத்தினரையும் வணங்கி இராஜமாபுர நகருக்குள் சென்றனர். அவர்கள், மலர்மாலை, ஆபரணங்கள் வண்ணச் சாந்து ஆதிய யாவு மின்றி மாசிலா வெள்ளாடை யுடுத்திப் பால சந்திரரைப் போல நகர வீதிகளூடே செல்வாராயினர். செல்பவர் தங்களுக்கு முன்னே நாலைந் தடிவரையில் ஏதாவது ஜீவஜந்துக்கள் இருக்கின்றனவா வென்று உற்றுப்பார்த்துக் கொண்டே மெல்ல மெல்ல அடிகளைப் பெயர்த்துவைத்துக் கொண்டு சென்றனர். அவர் கள் இல்லறத்தார் எதிர் கொண்டு இட்ட உணவுகளைப் பெற்றனரே யன்றித் தாமே வாய்விட்டு இரந்து உணவு பெற்றிலர்.

பகைவர் காணினும் அஞ்சி அன்பு கொண்டு உபசரிக்குந் தன்மை யராய் விளங்கிய அவர்களைச் சண்டகருமன் கண்டு மனம் கலங்கி, 'இரதியும் மன்மதனும் போன்று அழகுவாய்ந்த இப்பாலியர்கள் இங்ஙனம் வாடித்தமியராய்ச் செல்வதற்குக் காரணம் யாதோ வென இரக்கம் கொண்டனன். அவன் மனம் இரங்கியதேனும் அரசன் கட்டளை நினைவுக்கு வந்து அதனை மாற்றிற்று. உடனே அவன் தனது ஏவல் கிங்கரர்களை ஏவி அவர்களைப் பிடிக்கச் செய்தனன். அவர்கள் வேடர் கையிலே பட்ட மானெனப் பட்டனர். சண்ட கருமன் அவர்களை நடத்திக் கொண்டு தேவி கோயில் நோக்கிச் சென்ருன்.

---

* சிராவகர் இல்லற நெறியொழுகும் ஜெனர்.

பயங்கர வசனங்களைப் புகலும் கிங்கரர்களுக்கிடையே அவ்விளையவர்கள் நடுக்க மொன்று மின்றி நடந்தனர். அவர்களுள்ளே அபயருசி அசைவில்லாத மனத்தனாகித், தனது தங்கை அபயமதி இவர்கள் கைப்பட்டதற்கு எங்கே வருத்த முறப்போகின்றாளோ வென்று மனத்துட்கொண்டு, அவளது முன்கையைத் தன்கையாற் பற்றிக்கொண்டு அவளுக்குச் சில மொழிகின்றான் :

“தங்கையே! நீ இவர்கள் கைப்பட்டதற்குப் பயப்படாதே. இவர்களால் நமக்கு அழிவொன்று மில்லை. நாம் நாம் என்று குறிப்பது நமது ஆன்மாவை யன்றி இப்பொள்ளல் யாக்கையை யல்ல. உடலழிவினால் நமக்கொரு குறைவும் இல்லை. அதைக்குறித்து நாம் அஞ்சுவதும் பபனில்லை. அஞ்சுவதினால் வருவது வாராமற் போகாது. வருவது வந்தே தீரும். அஞ்சுதலே பெருந் துன்பம். அது நம்மை நஞ்சுபோற் சுற்றி நாடோறும் துன்பத்தைப் பெருக்கும். இப்பிறவிக்கு முன்னர் நாம் தீவினை வசத்தாய் விலங்கிடைப் பிறந்து சுழன்ற போது நம்மவரே நம்மைக் கொன்றதாக நமது ஆசாரியார் சொல்ல நாம் கேட்டிருக்கின்றோமல்லவா? வினையின் விளைவினால் நாம் நாற்கதியினுட்பட்டுப் பிறந்த பிறவிகளோ அனந்தம். அவற்றை வாய்விட்டுச் சொல்லவும் அரிது. பிறப்பனவெல்லாம் இறப்பதும் இறப்பனவெல்லாம பிறப்பதும் இயல்பே. அவ்வியல்பினதே நமது இவ்வுடலமும், நாம் பிறந்த பிறவிகள் தோறும் பெற்ற வுடம்பைப் பேணுவதிலேயே கருத்தைச் செலுத்தினோம். பிறவிப் பிணி போக்கும் தவநிலையில் சிறிதும் கவனம் செலுத்தினோ மில்லை. அதனாலேயே நமக்குத் தீவினை பெருகிப் பிறப்பு இறப்பென்னும் பிணி விடாமல் நம்மைப் பற்றி நிற்கின்றது. இப்பிணியின் தன்மை நம்மை நாற்கதிச் சுழற்சியில் அழுத்துவதேயாகும். நாம் இதுவரையில் இச்சுழற்சியில் அகப்பட்டே பல துன்பங்களை அனுபவித்திருக்கின்றோம். முன்னர், நரகத்திலே மூன்று முழ முதல் ஐந்நூறு வில்லளவும் ஏழு நரகங்களிலும் நாம எடுத்த சரீரங்களோ அனந்தம். அவைகளிலே அனலிற் குளிப்பது போன்ற துன்பங்களை யடைந்தது கூறுதற்கரிதாம். பின்னர் நாம் விலங்கு கதியில் நண்ணி அணு அணுவாய்ப் பெருகி அங்குலி தொட்டீரைஞ்ஞூறு யோசனை யளவு நாறும் உடம்புகளைப் பெற்றோம். அவைகளிலும் அளவிடற்கரிய இன்னல்களை அனுபவித்தோம். அதன் பின்னர் மனித கதியிற் புகுந்து ஒரு முழ முதலாக மூவீராயிரஞ் சிலையளவும் பெருகிப் பெற்ற உடலங்களோ கடல் மணலினும் அதிகமாம். அவற்றிலேயும் எண்ணிறந்த துயர்களை அடைந்தோம். புண்ணியப் பயனால் தேவகதியிலும் இரு முழம் ஆதியாக இருபத்தைந்து வில்லளவும் வளர்ந்து நாம் பெற்ற தேவ சரீரமும் அனந்தம். அவைகளும் முற்கூறியவை போன்றே அழிந்தொழிந்தன. துன்ப காரணமான நரக யாக்கையும், இன்ப காரணமான தேவயாக்கையும் என்றும் அழியம் இயல்புடையனவே யன்றி நிலையாக நிற்பனவல்ல. உயர்வாகிய இந்திரபோகம் பெற்ற பல இந்திரரும் இவ்வாறே அழிந்தொழிந்திருக்கின்றனர்.

மக்களிற் பிறவி யுள்ளும் மன்னர்தம் மன்ன ராகித்
திக்கெலாம் அடிப்ப டுத்துந் திகிரியஞ் செலவ ரேனும்
அக்குலத் துடைப்பு தோன்றி அன்றுதொட் டின்று காறும்
ஒக்கநின் றூர்கள் வையத் தொருவரும் இல்லை யன்றே.

ஆகலின் பிறப்பும் இறப்பும் மலின மடைந்த பழைய ஆடையை நீக்கிப் புதியதோர் ஆடையைப் போர்த்தலையும், குடியிருந்த வீடு இடிந்து போக அங்கே புதியதோர் இல்லம் அமைத்துக் குடிபுகுதலை யும் ஒக்கும். இவைபோலவே நமது வாழ்க்கையு மிருத்தலின், இப் பொழுது நமக்கு நேர்ந்துள்ள இந்தச் சம்பவத்தைக் குறித்து நீ மனம் வருந்த வேண்டா" என்று கூறினன்.

அதனைக் கேட்டு அபயமதி தமையனை நோக்கி, "அண்ணு! நீவிர் அருளிய மொழிகள் யாவும் கேட்டேன். எனக்கு மன நடுக்கமே இல்லை. எப்பொழுதும் நான் தெளிவுபெற்றே யிருக்கின்றேன். மிக்க அருவருப்பைத் தரும் இப்பொள்ளல் யாக்கையை வெறுத்து விண் ணின்பமே நாடிநிற்கும் எனக்கு இனிச்சொல்ல வேண்டுவது ஒன்றும் இல்லை. பெற்ற பெற்ற பிறவி தோறும் பெருந்துன்பமடைந்து வருந்தியதை நாம் நம்மடிகள் பால் கேட்டுத் தெளிந்திருக்கின்றோம். தெளிந்த ஞான்றே இவ்விழிவான யாக்கையை விடுவதற்கும் தயாரா யிருக்கின்றோம். இனி அஞ்சுதலும் உண்டோ? பெண்கள் மிக்க எளியர்; தைரியமும் உறுதியான உள்ளமும் உடையரல்லர் எனக் கருதி மேலும் எனக்கு நல்லறம் உரைக்க வேண்டுமாயின் உரையும். நான் அதனைக் கேட்கின்றேன்" என்று கூறிப் பஞ்சபர மேஷ்டிகளை மனத்தில் நினைத்துக் கைகுவித்தனள். அபயருசியும் அதே தியானத்தனாய்

ஈங்குநம் இடர்கள் தீர்க்கும் இயல்பினர் நினைந்து மேலிவ்
வோங்கிய வுலகத் தும்பர் ஒளிசிகா மணியி னின்றூர்
வீங்கிய கருமக் கேட்டின் விரிந்த எண் குணத்த ராகித்
தீங்கெலாம் அகற்றி நின்ற சித்தரே செல்லல் தீர்ப்பார்.

பெருமலை யனைய காதிப் பெரும்பகை பெயர்த்துப் பெற்ற
திருமலி கடையில் ஆண்மைத் திருவொடு திளைப்ப ரேனும்
உரிமையின் உயிர்கட் கெல்லாம் ஒருதனி விளக்க மாகித்
திருமொழி யருளுந் தீர்த்த கரர்களே துயர்கள் தீர்ப்பார்.

ஐவகை யொழுக்க மென்னும் அருங்கலம் ஒருங்க ணிந்தார்
மெய்வகை விளக்கஞ் சொல்லி நல்லற மிகவ ளிப்பார்
பவ்வியர் தம்மைத் தம்போற் பஞ்சநல் லொழுக்கம் பாரித்
தவ்விய மகற்றுந் தொல்லா சரியரெம் மல்லல் தீர்ப்பார்.

அங்கநூ லாதி யாவும் அரிப்பறத் தெரிந்து தீமைப்
பங்கமேழ் பங்க மாடிப் பரமனன் னெறி பயின்றிட்
டங்கபூ வாதி மெய்நூல் அமிழ்தகப் படுத்த டைந்த
நங்களுக் களிக்கு நீரார் நம்வினை கழுவு நீரார்.

பேதறு பிறவி போக்கும் பெருந்திரு வுருவுக் கேற்ற
கோதறு குணங்கள் பெய்த கொள்கல மனைய ராகிச்
சேதியி னெறியின் வேறு சிறந்தது சிந்தை செய்யாச்
சாதுவர் அன்றி யாரே சரணமக் குலகி னுவார்.

என்று முறையே சித்தர், அருகர், ஆசாரியார், உபத்தியாயர் சர்வ சாதுக்கள் ஆகிய பஞ்ச பரமேஷ்டிகளே அரணுவாரென அகத்திற் கொண்டனன்.

இங்ஙனம் தியான சித்தராய்ச் செல்லும் இளையரைச் சண்டகரு மன் விரைவில் நடத்திக் கொண்டு போய்ச் சண்டமாரி தேவி கோயிலின் முன்னிடமாகிய பலி பீடத்தினிடத்தே, நிறுத்தி அரசனை வணங்கி அப்புறம் விலகி நின்றனன். கிங்கரர்களும் அங் ஙனமே வணங்கி விலகினர். அப்பொழுது அரசன் தனது உடை வாளை உருவி அவ்விளையரைத் தேவிக்குப் பலியிட அருகே வந்த னன். இளையர்களாகிய இருவரும், தாம் நிற்பது கொலைக்கள மென் பதும், தம்மைக்கொல்லவே அரசன் நெருங்கினுன் என்பதும் தெரிந் தும் மனநடுக்கங் கொண்டிலர் ; தேகமும் குலுங்கிலர்.

அவர்களை அரசனுடைய குடிமக்கள் நோக்கி, "இளையர்களே ! இத்தேவிக்குச் சிறப்புச் செய்கின்ற எம்மரசன் திடகாத்திர தேகமு டையனுய்ச் சகல பாக்கியங்களும் பெற்று நெடுங்காலம் வாழ்கவென ஆசி கூறுங்கள்" என்றனர். இதனைக்கேட்டு அபயருசியும் அபயமதி யும், 'இப்பேதை மக்கள், இப்படி நாம் வாழ்த்துதலினுல் அரசன் நீடுவாழ்வனெனக் கருதுகின்றுர்கள் போலும். நல்லது இருக்கட்டும்' என்று புன்னகைசெய்து கொண்டு, "இவ்வரசன் மறச் செய்கையில் மயங்கி உலகத்திலுள்ள உயிர்களுக்கு வருத்தஞ் செய்யாது அறத்தை யுடைய மனத்தனுய்ச் சகல பிராணிகளிடத்தும் அருள் கொண்டு அருகக்கடவுளின் திருவறத்தை மருவி இந்நில வுலகில் நீடிசை பெற்று நெடுங்காலம் வாழக்கடவன்" என்று வாழ்த்துக் கூறினர்.

இவ்வாறு வாழ்த்துக் கூறிப் புன் முறுவல் செய்த அவ்விளைய வரை அரசன் உற்று நோக்கினுன். நோக்கி, இவர்கள் அங்கவிலைக் கணங்களெல்லாம் நன்கு பொருந்திப் பால சந்திரரைப் போல விளங் குகின்றனர், மரண துன்பத்திற்கு வருந்தாதார் இவ்வுலகில் எவரு மிலர். இவர்களோ அத்துன்பத்தைப் பொருட் படுத்தாது முக விலாசத்துடன் நகை செய்து வாழ்த்துக் கூறுகின்றனர். இவர்களது வசன சாமர்த்தியமும் போற்றத் தக்கதாயிருக்கின்றது. இத்தகைய ரை நான் இதுவரையிலுங் கண்டிலேன். இப்பாலியர்கள் என்னைச் 'சோதிக்க வந்த தேவரோ ? வித்தியாதரரோ ? அல்லது பூலோக வாசிகள் தாமோ' என்று தனக்குள் ஐயுற்று அவர்களை நோக்கி, "பாலியர்களே ! நீங்கள் இடுக்கண் வந்த போதும் நடுக்கஞ் சிறிதே னு மின்றி நகை செய்து விளங்குவதற்குக் காரணம் என்ன ? இவ்வூர்க் குப் புதியவராய நீங்கள் இங்கு யாது நிமித்தமாக வந்தீர்கள் ? உங்

களுடைய வரலாறு யாது? அதனை எனக்கு விளங்கச் சொல்லு வீர்'' என்று கேட்டனன்.

அதற்கு அபயருசி, "அரசே! வினையின் விளைவால் வரும் துன்பத்திற்குப் பயந்து ஆவதென்ன? பயப்படுவதனால் துன்பம் தொலைந்து போமா? பயமே வரும் துன்பத்தினும் பெரிது. ஆத லால் அதற்கு அஞ்சாமல் உடன்படுதலே நன்மையாகும். சுகத் திற்கு மகிழ்தலும் துன்பத்திற்கு அஞ்சுதலும் நாங்கள் கொள்ளாத தினால் தான் மரண துன்பத்திற்கு அஞ்சாது நிற்கின்றோம். பூர்வ ஜன்மத்தில் மாவினாற் கோழி செய்து சண்டமாரி தேவிக்குப் பலி கொடுத்ததின் காரணத்தினால் நாங்கள் விலங்கு கதியிற் பிறந்து பல துன்பங்களை அனுபவித்தோம்; அது இப்பொழுது எங்கள் நினை வுக்கு வரவும், இம்மன்னன் பல உயிர்களின் வதைப்பதனால் எத்த கைய துன்பத்திற்கு ஆளாகுவானோ? என்று எண்ணி நகைத்தோம்'' என்றான். அப்பொழுது அரசன் அருகிலிருந்தோர், "இச்சிறுவன் ஆண்மையினும் இச்சிறுமியின் ஆண்மையே கூறுதற் கரிது. பெண் கள் எப்பொழுதும் பயந்த சுபாவ முடையவர்கள். இப்பெண்பா லோ கொலைக்களம் குறுகியும் சிறிதும் நடுக்க முற்றிலள். இத்தகை யரைக் காண்பது அரிது! அரிது!!'' என்று பேசிக்கொண்டனர்.

மீண்டும் மன்னன் அபயருசியை நோக்கி, "நும் பண்டைய பிறவியின் வரலாறு யாது? அதனைக் கூறுமின்'' என்றான். அதற்கு அபயருசி, "அரசே! எங்கள் வரலாறு தரும காரியத்திற் சிந்தனை யுடையவர்க்கல்லது கொலைத்தொழில் மேற்கொண்ட பாபிகளுக்கு ஏலாது, ஆதலால் நீங்கள் கருதிய காரியத்தைச் செய்து முடியுங்கள். ஆவது ஆகட்டும்'' என்றான்.

அரசன் அம்மொழி கேட்டதும் அருளுடைய மனத்தனானான். முன்னம் கொலை புரிவதற் கெழுந்த கை நடுக்கமுற்றது. மனமும் சலித்தது; தேசமும் குலுங்கியது. உடனே அவன் கையிற் பற்றி யிருந்தவாளை ஒரு புறம் வீசி எறிந்துவிட்டு, அபயருசியைப் பார்த்து, "அபய ருசியே! இனி எனக்கு நீயே இறைவன்; உன்னையன்றித் தலைவன் வேறொருவரையுங் கண்டிலேன்; எனக்கு நும் இருவரது முற்பிறப்பு வரலாற்றினை விளங்க உரைத்தருளல் வேண்டும்'' என்று வணங்கிக் கேட்டனன்; அரசனுக்குத் திடீரென்று இந்த ஞானமுண் டானதற்குக் காரணம் கல்வி கேள்விகளினால் உண்டானதல்ல. முன் செய்த நல்வினைப் பயனால் உண்டானதாகும்.

அரசன் அறவுரை கேட்கும் பக்குவ மடைந்ததைக் கண்ட அபயருசி அரசனை நோக்கி, "அரசே! உமது ஞானம்வெகு அழகிது. இது போலப் பாபிகள் மனம் இலேசில் திரும்புதல் அரிது. பல பிராணிகளைக் கொன்று பாபம் தேட இருந்த நீ இங்ஙனம் திரும்பி யது ஆச்சரியத்தினும் ஆச்சரியம். உனது நல்வினைப் பயனே உன்னை இங்ஙனம் திருப்பியது. இனி உனக்கு எங்கள் பிறவியின் வரலாற்றைக் கூறுவோம். கவனத்தோடு கேட்பாயாக.''

"யாங்கள் எங்கள் முன்பிறப்பு வரலாறுகளைத் தவசீலங்களினால் மெய்ஞ்ஞானத் தெளிவு பெற்று முக்காலச் செய்தியையும் முறையறிந் துரைக்க வல்ல எம்மாசிரியர் பால் கேட்டுணர்ந்தோம். இவ்வரலாற்றைக் கேட்டால் இருவினை நீங்கி உண்மை யறிவுண்டாகும்; வீட்டின்பம் கிட்டும்; மனம் செவ்வைய தாகும்; சஞ்சல மகலும்; ஐம்புலன்களினது பேரவா நீங்கும்; கொலை பொய்களவுகள் காமம் ஆதிய பஞ்சமகா பாதகங்கள் அணுகா; பிழை பல தரும் பெண்கள் மேல் மனஞ் செல்லா; ஞானத் தெளிவிலாதார் "உலகில் பிறந்தோர் யாவரும் முயற்சியினாலேயே எல்லாப் பலன்களையும் பெறுகின்றார்கள், கர்ம மென்பது ஒன்றில்லை, இறந்தவர் பிறப்பதில்லை, இருவினை நம்மை ஒன்றுஞ் செய்யா, என்று கூறும் மயக்க மொழிகளினின்றும் நீங்கி முன்னுக்குப் பின் முரண்பாடிலாத அருகக் கடவுளினது திருவறத்தைப் பெறலாம்" என்றான்.

அரசன் முதல் யாவரும் மேல் கூறும் வரலாற்றினை மிகக் களிப்புடனும் கவனத்துடனும் கேட்பா ராயினர்.

---

இங்கிலாந்திலிருந்து சாமான்கள் 'வராமல் போனால் இந்தியா தேசம் கஷ்டப்படுமென்று ஒரு ஆங்கிலேயர் கூறுகிறார். இந்தியா சரக்குகள் வாங்காவிடில் அங்குள்ள ஆலைகள் அசை வற்று நின்று, தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடுவார்களென்று இவர் சொல்லியிருந்தால் பொருத்தமாயிருக்கும்.

***

இங்கிலாந்திலிருந்து போன வருஷம் இந்தியாவிற்கு 780 லட்சம் பவுன் மதிப்புள்ள சரக்குகள் வந்திருக்கின்றன.

***

சென்ற வருஷம் இந்தியாவில் 230 லட்சம் ஏக்ரா பூமியில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. ஒரு ஏக்ராவில் 88 ராத்தல் பஞ்சுதான் கிடைக்கிறது. ஆனால் அமெரிக்காவிலோ ஒரு ஏக்ராவுக்கு 200 ராத்தலும், எகிப்திலே 400 ராத்தலும் கிடைக்கிறதாம்.

***

இந்தியாவில் சுரத்தினால் மாண்டவர்களின் கணக்கு.

| | | | |
|---|---|---|---|
| 1918-ம் | வருஷம் | 11 லட்சம் | 10 ஆயிரம். |
| 1919-ம் | ,, | 54 | ,, |
| 1920-ம் | ,, | 49 | ,, |
| 1921-ம் | ,, | 47 | ,, |
| 1922-ம் | ,, | 36 | ,, |

***

பம்பாயில் பிரபலப் பஞ்சாலைகளில் இரண்டு மூடப்பட்டன. காரணம் பஞ்சு விலை ஜாஸ்தியாயும், துணி விற்பனை கம்மியாயுமிருப்பதே.

***

# பாரத மாதா

('தேச சேவகன்' மாஜி ஆசிரியர் ஸ்ரீமாந் முகம்மதுராம்.)

பிரம்மத்தின் மந்திர சொரூபம் 'ஓம்' எனப்படுகிறது; பரமபதி சிவ பிரானின் மந்திர சொரூபம் 'நமசிவாய, எனப் படுகிறது. பிரகிருதி மாதாவாகிய காயத்திரி காயத்திரி—மந்திர சொரூபமாயிருக்கிறாள். சாக்ஷாத் சுப்பிரமணியக்கடவுள் சரவணபவ என்ற சடாக்ஷர சொரூப மாயிருக்கிறார். இங்ஙனம் நாம் வழிபடும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு ஒலி வடிவு இருப்பதைக் காணலாம். ஆம், நாம் முப்பத்துமுக் கோடி இந்தியருக்கும் உயிரும் உதிரமும், உருவமும் பெருமையுங் கொடுத்து உலகில் வாழ்க்கை தந்த நமது 'முன்னறி' தெய்வம் "பாரத மாதா" எனப் படுவாள். அவளது புனித 'ஒலிவடிவு' தான் 'வந்தே மாதரம்' என்று நாம் உச்சரிப்பது.

* * * *

"வந்தே மாதரம்" ஓர் மகா மந்திரம். அதனை அலட்சியமாகவும் பயபக்திக் குறைவாகவும் உச்சரிக்கவோ உடயோகிக்கவோ கூடாது. "கடுகைத் துளைத் தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த" தாகும் அவ்வேழெழுத்தாலான சொல். 'ஓம்' என்ற பிரணவத்தில் சராசரங்களும் பிரமாண்டமும், நீரும் நாமும், சகலமும் அடக்கம் என்கின்றார்கள். அதற்கு 'வந்தே மாதரம்' குறைந்ததல்ல. அன்னையின் பெருமை அப்பனின் பெருமையைவிடப் பெரிதல்லவா? எத்தனையோ பேர் நாள் தோறும் இம்மந்திரத்தை எடுத்தோதுவதை நாம் செவியாறக் கேட்டிருக்கிறோம். ஆனாலும் அவர்களில் பெரும்பாலரின் உச்சரிப்புக்கும் தவளைகளின் 'குட குட' கோஷத்திற்கும், நரிகளின் ஊளைக்கும் பேதம் அதிகமின்று. இவர்களில் ஒருவரும் தாம் கூறுவதன் ஆழ்ந்த பொருளை அறியார்கள். வந்தே மாசரம்! ஹா, எவ்வளவு ஆழ்ந்த பொருள், எவ்வளவு அபார சக்தி, எவ்வளவு அற்புத வலிமை!!!

* * * *

'வந்தே மாதரம்' என்ற சொல்லில் நாம் பாரத மாதாவைத் தரிசிக்கவேண்டும். ரவிவர்மா தீட்டிக்காட்டியுள்ளதுபோல் அவள் கேவலம் ஒரு அழகிய பெருமாட்டியல்ல. அல்லது பூகோள சித்திரத்தில் சில கோடுகளால் முக்கோணமாய்த் தெரிவதும் நமதன்னையாகிய அவளல்ல. நாமே அவள்தான்! இந்நாட்டில் உடலெடுத்தவரெல்லாம் அவள் சாயல். கைலாய கிரியின் உச்சியிலும் அவள்தான். நமது கொல்லையில் மலரும் எருக்கம் பூவிலும் அவள்தான். பண்ணையிலும் அவள்தான்; அண்டையிலும் அவள்தான். லங்கைக்குச் சேது சமைத்தவள் அவள்தான்; அங்கையிலே கடலை யுண்டவள் அவள்தான். அரவக்கொடியோனை அழித்தவளும் அவள் தான்; அவுரங்கஜீபை அல்லற் படுத்தியவளும் அவள்தான்; இப்போது

ஒத்துழையா தர்மம் ஓதியவளும் அவள் தான் ! இனி, எதிர் காலத்தி லும் அவள் தான் !

* * * *

அன்னையின் பெயரைச் சொல்லுமுன் சென்னியில் கரஞ் சூட வேண்டும். வடக்கே பனி மூடிய ஹிமாசல முடி முதல் தெற்கே முக்கடல் நீர் அலம்பும் கன்னியா குமரி வரை ஒரு கம்பீர மான காட்சி நம் கண் முன் எழவேண்டும். நம் தேச சரித்திரநூ லொன்றின் ஏடுகளைத் திருப்புவது பொன்னேறு படர்ந்த மலைச்சாரல் களும் அடர்ந்த காடுகளும் ரிஷிகளையும், பூசுரர்களையும் தொடர்ந்து வேத கோஷஞ் செய்திருந்த காலமுதல் இன்று வரை எத்தனை ஞானிகள் எத்தனை கவிகள் எத்தனை வீரர்கள் எத்தனை அரசர்கள் அன்னையின் நன்மைக் கெனத் தம தரிய மூளையையும், இருத யத்தையும், இரத்தத்தையும் உயிரையும், உடைமைகளையும் பலி கொடுத்தனரோ அவர்களது செயல்களெல்லாம் தொடர்ச்சி யாய் ஒன்றின்பின் ஒன்ருக நம் நினைவில் ஓடவேண்டும். ஹோ ! உங்களால் இக்காட்சி காணப் பொறுக்காது. உயிர் அன்னையின் பால் ஓடிவிட அவாவும் ; உடல் அதனுடன் மல்ல யுத்தம் செய்யும். ஆடிக்காற்று ஆலிலை போல் உயிரும் உடலும் துடி துடிக்கும். ஒரு பால் துக்கம் மிக்கு தொண்டை விக்கும். மறு பால் மகிழ்ச்சிபுக்கு கண்ணீர் நெகிழ்ச்சியுறும். ஜாதி, மதம், குலம், அந்தஸ்து, சுயநலம், பொறுமை, அதைரியம் எல்லாம் அன்னையின் திருமுன் எரிந்து ஒழி யும். மிகுந்து மாற்றேறிய உடல் பொருள் ஆவி மூன்றும் அன்னையின் அரவிந்தத் தாள்களில் அர்ப்பணமாகிவிடும். ஹோ ! ஒரு மறு பிறவி யே வந்து விடும் !

* * * * *

'வந்தே மாதரம்' என்றுல் தாயைத் தொழுகின்றேன் என்று பொருள். அதன் அற்புத சரித்திரமும், பெருமையும் கேளுங்கள். புண்ணிய பூமியாம் வங்க நாட்டில் முதன் முதல் இம்மந்திரம் சுமார் இருபது வருடங்களுக்குமுன் அன்னையின் அருளால் வெளிப் போந் தது. சிறந்த வங்காள கவியானபங்கிம் சந்திரர் அதனை ஒரு தெய்வீக கீதமாகப் பாடி உலகுக் களித்தார். வங்கநாட்டுச் சிங்கக் குட்டிக ளான இளைஞர்கள் இக்கீதத்தைப் பாடிக் காளி கட்டத்தில் வானை முட்டி நிற்கும் துர்க்கா தேவியின் அருள் பெற்றனர். முப்பத்து முக்கோடி இந்தியரும் நிறத்தில் கருப்பு ; அவர்கள் வயிற்றிலும் கருப்பு புகுந்தது. துர்க்கையும் நிறத்தில் கருப்பு ; அவள் வயிற்றி லும் கருப்பு புகுந்தது, பசியால் துடிக்கிருள். சுடுகாட்டில் தனித்து நிற்கிருள். எலும்புகளே அவளுக்கு ஆபரணங்க ளாயின. ஆடை யில்லை ; நிர்வாணமா யிருக்கிருள். அன்னிய ஆடையுடுத்தும் இந்தி யரையும் நிர்வாணமென்றே கொள்ளவேண்டுமென்ருே ? அந்தோ ! நூற்றுக்கணக்கான நம திளஞ் சிங்கங்களை அன்னை 'பலி பலி' என்று வாங்கிக்கொள்கிருள். இன்னும் வெகு உக்ரமாயிருக்கிருள். ஹா !

## பாரத மாதா

அன்னையைப் போல் அருட்கடலு மில்லை; அன்னையைப் போல் கொடுமை விளைப்பவளு மில்லை.

*    *    *    *    *

அன்னையின் பெருமை அளவிட அரிது. லோகமான்ய திலகர் 'அன்னையின் விடுதலைக்காக யான் கொலையும் கைக்கொளத் தயார்' ரென்றார் ஓர்முறை. மகாராஷ்டிர சிங்கம் சிவாஜிராஜன் அன்னையைப் பவானி என்று வழிபட்டான். நமது கவிதிலகர் பாரதியார் அவளைச் சக்தி யென்று கும்பிட்டார். பட்டிக்காட்டவர் அவளைக் கிராம தேவதை என்கின்றனர். நமது பண்டை நாளவர் அவளைப் பூமாதேவி என்றனர். "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்ற வாக்கியம் அவர்கள் அருளியதே. முற்கால கிரேக்கர்கள் அவளை 'லிபர்ட்டி' என்று பெயரிட்டு வணங்கினர். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்," என்று அன்னையை எதற்கும் முன்னிலையில் வைத்தாள் ஒரு படித்த கிழவி. சன்யாசம் புகுந்தாலும் அன்னையின் கடனி னின்று தப்பமுடியாது என்று கண்டனர் நம் பெரியார். கேவலம் உழு தொழிலாலேயே அன்னை நோவடைகிறாள் என்று கொண்டு பிராயச் சித்தமாகக் களப்பிச்சை முதலிய சடங்குகளை அமைத்தனர் அவர்கள். இத்தனை அருமையாய் அன்னையைப் போற்றியவர் வழி வந்த நாம் அவள் அடிமையிலும் மிடிமையிலும் உழன்று குமுறுவது கண்டும் மனங்கரையாதிருப்பது பெரிய அதிசயமன்றோ?

*    *    *    *    *

இறைவனை அன்னையென்று இறைஞ்சி வழி பட்டவர் உலகில் ஒரே மதத்தவர் தான். அவர் ஹிந்துக்களாகிய நாமே. அன்னையின் பெருமையை முதல் முதல் உணர்ந்தவர் நாமே; இப்போது முற்றும் மறந்து வருந்துவோரும் நாமே. நாம் காணும் ஒவ்வொரு பொருளிலும் உயிரிலும் அன்னையைக் காணவேண்டும்; அவளது பெருமையின் சாயலை அவற்றில் கண்டு மகிழவேண்டும். இத்திறமை படைத்தவனே உண்மைத் தேசபக்தன். நமது ஸ்திரீ ஜனங்களெல்லாம் அன்னையின் பிரதி பிம்பங்கள். அவர்களை நாம் போற்றவேண்டும். இங்ஙனமிருக்க, நாம் தெய்வம் வேறென்றோம்; தேசம் வேறென்றோம். வீட்டில் பெண்ணரசியர் தலையில் கல்லெறிந்தோம்; ஆலயத்தில் அன்னையென்று பூஜித்துப் புஷ்ப மெறிந்தோம் ஊரில் பறையரென்று பல்லோரைச் சினந்து அடித்தோம்; வெளியில் பரமன் அன்புருவென்று பறை யடித்தோம். தெய்வம் ஒன்றே யென்றோம்; 'அல்லா' என்றவனை அகன்று ஓடென்றோம்.

"த்யஜே தேஹம் குலஸ் யார்த்தே
கிராமஸ் யார்த்தே குலம் த்யஜேத்.
கிராமம் ஜனபதஸ் யார்த்தே—த்யஜேத்"

அதாவது ஒரு குலத்தின் நலத்திற்கென ஒருவனையும், ஒரு கிராமத்தின் நலத்திற்கென ஒரு குலத்தையும், ஒரு தேசத்தின் நலத்திற்கென ஒரு கிராமத்தையும் தியாகஞ் செய்யலாம் என்று சொன்ன பெரியோர் மொழியை ஒதுக்கி வைத்து விட்டோம். காலராவுக்கும், பிளேக்குக்கும், வெள்ளத்திற்கும் நூற்றுக்கணக்காய் நம் மக்களைத் தியாகஞ்செய்கிறோம்; அன்னைக்கென, தேசத்திற்கென ஒருவனைத் தியாகஞ் செய்ய மனங் கொள்வதில்லை. பகவத் கீதையைத் தினந்தோறும் பாராயணஞ் செய்கிறோம்; சமயம் நேரும் போது எல்லாம் கடவுள் பாரமென்று சோம்பிக் கடமையை நடுத்தெருவில் விடுகிறோம். தனக்கு மிஞ்சித் தருமம் என்று பெரியோர் விதித்ததைத் தனக்கு மிஞ்சி தருமம் என்று ஆக்கிக்கொண்டோம். நெல் 'குற்று' கிறதா நெல் 'குத்து' கிறதா என்று வாதாடி வழக்குரைதது நமது அன்னையின் இருதயத்தையும், சமய சமரஸத்தையும், ஒற்றுமையையும் குத்திக் குற்றுயிராக்கினோம். நம் குழந்தைகள் அன்னையின் கண்கள் தெய்வத்தின் சாயல்கள் என்பதே மறந்து அவற்றின் மனத்தே உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்றவிஷத்தை ஊட்டினோம். பறையர்களென்று ஏழு கோடி மக்களை ஊணும், உடையும், ஒழுக்கமும், உரிமையும் பெறக்கூடாது படாதபாடு படுத்தி வருகிறோம். விதவைகளென்று பல்லாயிரம் சிறுமிகளை வாழ் நாளெலாம் முன்தானையில் படுத்து மனம் வேகவிட்டோம். அன்னையை மறந்தோம்; அவளுக்கு மிகப் பெரிய அபராதம் ஆற்றிவிட்டோம். எளிதில் மன்னிக்கமாட்டாள். இதோ! நம்மை அவள் தண்டித்து வருகிறாள்; இன்னமும் கோரமாய்த் தண்டிக்கப் புகுவாள்.

*　　*　　*　　*　　*

தேச பக்தியும், தெய்வ பக்தியும் ஒன்றே. பிரத்தியக்ஷமாய்க் காணும் தெய்வத்தை வழிபடக் சற்ற வன் தான் அரூபியும் நிர்குணியுமான தெய்வத்தை வழிபடும் ஆற்றல் பெற்றவன். இல்லறத்தில் நன் கொழுகியவனே துறவறத்தில் நன் கொழுகக் கூடும். தன் அயல் வீட்டானை நேசியாதவன் அம்பலத்திலுள்ள கடவுளை நேசிக்கமாட்டான். கிருஸ்து வேதத்தில் "நின் அன்பைப் பெறுவதற்குச் சிறந்த முறை எது?" என்றொரு பக்தன் இறைவனைக் கேட்டதாகவும் அதற்கு "அயல் வீட்டானிடம் அன்பு பாராட்டுதலே சிறந்த முறை" என்று விடை பெற்றதாகவும் ஒரு கதை யுண்டு. உண்மைகளை ஆராயுமிடத்து தேசபக்தன் தெய்வ பக்தனாகிவிடுவது திண்ணம் என்றேற் படும். அதிலும், மகாத்மா காந்தியின் உபதேசத்திற் கப்பால் தேச கைங்கரியஞ் செய்பவன் தெய்வ கைங்கரியம் செய்பவனாகவே யிருக்க முடியும்.

*　　*　　*　　*　　*

மேனாட்டாரும் தேசத்தை அன்னையென்று போற்றுகிறார்கள் ஆனால் அவரை நாம் முற்றிலும் பின் பற்றக் கூடாது. அவர்களது பக்தி தேசபக்தி யல்ல; தேச சுய நலமேயாம். நமது தேசபக்தி உலக

பக்தியில் லோகோபகாரத்தில் கொண்டு சேர்ப்பதாயிருக்க வேண்டும் பிற நாடுகளெல்லாம் பசித்திருந்தாயினும் நம் நாடு சோறுண்ண' வேண்டுமென்று எண்ணுவது தேசபக்தியாகாது. மேனாட்டாருக்குத் தேசபக்தி என்று கூறிக் கொள்ளும் சுய நலமே கோடரிக் காம்பாகி வருகிறது ; நமக்கோ நமது போலி வேதாந்தமே கோடரிக் காம்பாகி வருகிறது.

* * * * *

ஸ்ரீயுத சுப்பிரமணிய சிவம் அன்னைக்கு அரும்பணி செய்தார் பாப்பாரப்பட்டியில் ஒரு கோயிலியற்றி முப்பத்து முக்கோடி மக்கள் இதயத்தும் அன்னையைக் கோயில் கொளச் செய்யும் வழி காட்டினார். ஆனால் அன்னையின் கோயிலில் தொழுகை கேவலம் மூட பக்தியாலும், சுய நலத்தாலும், வீண் ஆடம்பரத்தாலும் அழுக்கேறக் கூடாது. அது இந்திய பூமியில் உதித்த எந்த ஜாதியாரும் மதத்தாரும் தோள் உராய்ந்து ஒருங்கே சமபாவமாய்த் தொழ உற்றதாயிருத்தல் வேண்டும். கோயிலில் வருவோர் மனத்தில் தேச நலமும், தேசபக்தியும் நீக்கமற நிறைந்து விளங்குதற்குரிய சாதனங்களே அதில் இருத்தல்வேண்டும். விக்ரக ஆராதனையையும், ஹிந்து மத சம்பிரதாயங்களையும் வெறுப்பவரும் மறுப்பவருங் கூட அங்கு தனித்துத் தொழ இடம் வேண்டும். அண்மையில் தான் ஸ்ரீயுத சித்தரஞ்சன தாஸர் தம் நகரில் இத்தகைய கோயில் அமைக்கப் பெருநிதி உதவி அன்னையின் பேரருள் பெற்றார்.

* * * * *

அன்னையின் கோயில்களைக் கோடிக்கணக்காய்ப் பரப்புங்கள்! அவை நாட்டிற்குப் புதிய உயிர் அளிக்கும். இந்த ஜாதி தேய்ந்து புதிய ஜாதி தோன்றும்; அது ஜோதி போல் நின்று உலகைக் கவியும். அன்னையின் புகழை அநுதினமும் பாடுங்கள்! அருட்கவி பாரதியின் கவிகளைச் செவியார மெய் மறந்து பாடுங்கள்! புது மதம் தோன்றும்! புதிய யுகம் தோன்றும்.! நாடு புத்துயிர் பெறும்!! வந்தே மாதரம்.

---

கல்கத்தா நகர பரிபாலன சபைக்குத் திரும்பவும் தேசபந்து தாஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

***

மாயவரம் தபாலாபீஸ் குமாஸ்தா லக்ஷ்மி காந்தய்யர் இன்ஷியூர்க் கடிதங்களை மோசடி செய்ததற்காக மூன்று வருஷம் கடுங்காவல் தண்டனையும், ரூ. 250 அபராதமும் விதிக்கப்பட்டார்.

***

இங்கிலாந்து சென்றிருக்கும் லார்டு ரீடிங் ஆகஸ்டு மாதம் இந்தியாவிற்குத் திரும்பி வருவாராம்.

---

# பத்திராதிபர் குறிப்புகள்

## தமிழர் கட்சி.

பற்பல கட்சியுள்ள பிராமணரல்லாத தமிழர்களை ஒன்று சேர்க்க முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும், கூடிய சீக்கிரத்தில் இது விஷயமாய் ஆலோசிக்க ஒரு சபை கூட்டப்போவதாகவும் டாக்டர் நாயுடு பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருக்கிறார். இது ஒரு புனிதமான காரியம். தமிழர்களை ஒன்று சேர்த்துத், தமிழர்களுக்குள் அன்பும், சுயமதிப்பும், ஒற்றுமையும், ஏற்படுத்தவேண்டிய தவசியம், அவசரம். இதைச் செய்ய முன் வந்த நமது தென்னாட்டுச் சிங்கமான ஸ்ரீமான் வரதராஜுலுவை நாம் மனமார வாழ்த்துகிறோம். இவர் நோக்கத்தைப் பூர்த்தி செய்து வைக்கும்படி பரப்ரம்மத்தைப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீமான் நாயுடு தென்னாட்டில் உண்மையான தியாகி. உண்மையைக் கடைப் பிடித்து நிற்பவர். நினைத்த காரியத்தைச் சரிவரச் செய்து முடிக்கும் தீரர். உண்மைக்கே உழைப்பவர். எது எப்படி வரினும், முன்வைத்த காலைக் காரியம் முடியாமல் பின் வாங்கார். இவர் வாழ்நாளைத் தேச கைங்கரியத்திற்கு அற்பணஞ்செய்து விட்டு, பலமுறை காராக்கிரஹம் சென்ற வீரர். இதர பிரசங்கிகளைப்போல் மேடையில் கத்திவிட்டுச் சும்மாயிருப்பவ ரல்லர். பேச்சுப்படி காரியத்தில் நடத்திக் காட்டுபவர்.

நமது காங்கிரஸ் தலைவர்களெல்லாம் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று அப்பப்பா ! என்ன பேச்சுப் பேசுகிறார்கள். எத்தனையோ பிரசங்கங்கள் சரமாரியாக நிகழ்த்துகிறார்கள். தற்சமயம் சுயராஜ்யக் கட்சித் தலைவராயிருக்கும் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் சுமார் எட்டு வருஷங்களுக்கு முன், பம்பாயிலிருந்து வந்திருந்த தாழ்த்தப்பட்ட மிஷினைச்சார்ந்த மிஸ்டர் லயின்டெயின் தலைமையின் கீழ்ப் பேசியது இன்னும்—இன்று பேசியது போல்,நமது காதில் கணீரென்று கேட்கிறது. அதாவது "தீண்டப்படாதவர்களை நம் வீடுகளில் வேலைக்கு வைத்துக் கொள்ளவேண்டுமென்று" மிகவும் உருக்கமாய்ப் பேசினார். காங்கிரஸ் வாதிகளில் எத்தனை பேர், இன்று அன்பர் ஐயங்கார் அவர்கள் வார்த்தைப்படி தீண்டப்படாதவர்களை வேலைக் கமர்த்தி யிருக்கிறார்களென்பதை நாம் பணிவுடன் கேட்கிறோம். நமக்குத் தெரிந்தவரை நண்பர் நாயுடுவே இவ்விஷயத்தில் முன்நிற்கிறார். துரதிஷ்டவசமாகத் தமிழ் நாட்டில் தற்சமயம் சேரமா தேவிக் குருகுலத்தினால் ஏற்பட்டிருக்கும் விவாதத்தால் காங்கிரஸ் வாதிகளில் சிறந்த பக்தர்களில் சிலர் கூட, ஜாதி யபிமானத்தால் நமது நாயுடுவை வெறுக்கலாம். எனினும், அவருடைய கைங்கரியத்தை யும், தேச சேவையையும், தியாகத்தையும் ஒருவராலும், மறுக்கமுடியாது. நிற்க.

# பத்திராதிபர் குறிப்புகள்

நாமும், நமது சிற்றறிவுக் கெட்டிய சில விவரங்களை, டாக்டா நாயுடுவின் யோசனைக்குச் சமர்ப்பிக்கிறோம். யோசித்துப் பார்ப்பராக.

1. தமிழர் மகா நாடு சென்னையில் கூட்டவேண்டும். அதற்கு ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்களையும், பிராமணத்தலைவர்களையும் அழைக்க வேண்டும். தென்னாட்டில் ஒவ்வொரு குக்கிராமத்திலிருந்தும், குறையாமல் இரண்டு முக்கிய பிரதிநிதிகள், மகாநாட்டிற்கு வர வேண்டும்.

தமிழர் சங்கம் ஒவ்வொரு குக்கிராமத்திலும் ஸ்தாபித்தல் வேண்டும். இச்சங்கத்திற்கு வேண்டிய விதிகளைத் திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள் தலைமையின் கீழ், ஒரு கமிட்டி நியமித்து, ஏற்படுத்த வேண்டும். இதற்குத் தலைமைச் சங்கம் சென்னையில் இருக்க வேண்டும். வருஷா வருஷம் ஒரு மகாநாடு கூட்டி அந்தந்த வருஷத்து வேலைகளைப் பற்றிப் பிரஸ்தாபிக்க வேண்டும். தமிழர் இயக்கம் வளரவேண்டும். தமிழர்களுக்குள் ஒற்றுமை வேண்டும். ஜாதிச் சமயச் சண்டைகளை அறவே ஒழிக்கவேண்டும். ஆரம்பத்தில் ஜஸ்டிஸ் கட்சி ஏற்படும் போது தேசீய இயக்கத்திற்கு விரோதமாக நடந்ததற்காக நாமும் வருந்தினோம். இன்னும் ஜஸ்டிஸ் கட்சி, சர்க்கார் கட்சியென்று பலரும் அபிப்பிராயப் படுகிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு ஒரு விண்ணப்பம். ஜஸ்டிஸ் கட்சியைத் தமிழ் கட்சியுடன் சேர்த்துவிடும்படி கோருகிறோம். "திராவிடன்" பத்திரிகையைத் "தமிழன்" என்று மாற்றித் தமிழர் கட்சியார் நடத்த வேண்டும்.

